




# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 12, இதழ் - 4 ஜுலை - ஆகஸ்ட் 2026

R4917

## A PRACTICAL SELF - EXAMINATION OF LOVE
## அன்பைப் பற்றிய ஒரு சுய பரிசோதனை

“நீங்கள் விசுவாசமுள்ளவர்களா என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்;
உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்.” 2 கொரிந்தியர் 13:5

அன்பைக் குறித்து விவரிப்பது இயலாத காரியமாக தெரிகிறது. இந்த ஆச்சரியமான குணமில்லாமல் தேவனுடைய பார்வையில் எதுவும் ஏற்புடையதல்ல. அப்போஸ்தலர் அன்பை வரையறுக்க முயற்சிக்கவில்லை. ஆனால் அதன் வெளிப்பாடுகளை நமக்கு கொடுப்பதில் அவர் திருப்தி அடைகிறார். இப்படிப்பட்ட குணலட்சணங்களுடன் அன்பை பெற்றிருப்பவர்கள் அதைப் பாராட்டுவார்கள்.வேறு விதமாக அதை விளக்க முடியாது. ஜீவன் மற்றும் வெளிச்சத்தைப் போல அன்பை வரையறுக்க இயலாது என்பதே உண்மை. அதை புரிந்து கொள்ள நமது சிறந்த முயற்சிகள் அதன் பலன்களின் திசையில் இருக்கின்றன. அது தேவனுடையது. அது இருதயத்தில், நாவில், கையில் மற்றும் எண்ணத்தில் தேவனைப் போன்றது. அது மானிட பண்புகள் அனைத்தையும் மேற்பார்வையிட்டு அவைகளை கட்டுப்படுத்த நாடுகிறது. அன்பு எங்கு குறைவுபடுகிறதோ அதன் பலன் ஏறக்குறைய தீமையாக இருக்கும். அன்பு இருக்கிற இடத்தில் அதன் அளவுக்குத்தக்கதாக பலன் வேறுபட்டு நன்மையாக இருக்கும்.

கிறிஸ்தவனிடத்தில் வெளிப்புற வெளிப்பாடாகிய நட்புறவு, சாந்தம், தயவு, பொறுமை முதலான குணங்கள் தேவனுடைய பார்வையிலும் அல்லது அவனது சொந்த பார்வையிலும் போதுமானதல்ல. இந்த கிருபைகள் அன்பின் ஆவியினால் உறுதிப்பண்ணப்பட்டு அவனது சொந்த இருதயத்திற்குள் நிரம்பி விரிவடைய வேண்டும். அநேக ஆவியின் கிருபைகள் மீண்டும் உருவாக்கப்படாதவைகளால் அங்கீகரிக்கப் படுகிறது. நல்ல ஒழுக்கம் என்று பின்பற்றப்படுகின்றன; அவை அநேக காரியங்களில் இருதயத்தையும் மனோபாவங்களையும் அன்பின் பரிசுத்த ஆவிக்கு விரோதியாக கருதி ஒரு முக்காட்டைப் போல வெற்றிகரமாக அணியப்படுகிறது.

தெய்வீக அன்பைக் குறித்து நாம் பாராட்டின அளவு தெய்வீக மாதிரிக்கு ஏற்ப நமது குணலட்சணத்தை அமைத்துக்கொண்ட நமது வைராக்கியத்தின் அளவாக இருக்கும். தெய்வீக அன்பின் கிருபை இருதயத்தில் நுழைந்த பிறகு, முரட்டுத்தனமான, கடுமையான, இழிவான குணலட்சணம் மாற நீண்ட காலம் தேவைப்படுகிறது. அதற்கு முன்னதாக கிருபை மனிதனின் சகல எண்ணம், வார்த்தை மற்றும் கிரியையில் வெளிப்படுத்தப்படும். மாறாக, மற்றவர்கள் உயர்குடி பிறப்பு மற்றும் நற்பண்பு பயிற்சியினால் தேவனுடைய கிருபை இல்லாமல் வெளியரங்கமான நற்பண்புகளைப் பெற்றிருப்பார்கள். தேவனைத் தவிர யாரும் இருதயத்தை அறிய திறமை படைத்தவர்கள் இல்லை. ஆகையால் அவர் மட்டுமே இந்த கிருபையை யார் பெற்றிருக்கிறார்கள் மற்றும் யார் பெறவில்லை என்பதையும் அவர்களது இருதய அபிவிருத்தியின் அளவையும் அறிவார். ஆனால் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்தறியலாம். அந்த அன்பின் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒவ்வொருவரும், பரலோகத்தில் உள்ள பிதாவானவரை மகிமைப்படுத்தவும், “நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கவும்” உடன் சிருஷ்டிகளிடம் இருக்கும் சகல தொடர்புகளிலும் அதன் வெளிச்சம் பிரகாசிக்கடவது. (1 பேதுரு. 2:9)

அப்போஸ்தலர் காலத்தில் கனிகளில் (வரங்கள்) தீர்க்கதரிசனம் உரைத்தல் அல்லது பிரசங்கம் பண்ணுதலுமே சிறப்பாக இருந்தது. தேவனைப் பற்றிய இரகசியங்கள் பற்றிய அறிவும் அதிகம் பாராட்டப்பட்டது. பெரிய விசுவாசம் கிறிஸ்தவ தேவைகளில் பிரதானமாக கருதப்பட்டது. எனினும் அப்போஸ்தலர் கூறுவது என்னவென்றால், ஒருவன் இவை அனைத்தையும் முழு அளவில் பெற்றிருந்து அன்பு இல்லையென்றால் அவன் ஒன்றுமேயில்லை என்பதாகும். அவன் வெறும் பூஜ்யம்தான். அவன் புது சிருஷ்டியின் ஒரு அங்கமே இல்லை. ஏனெனில் புது சுபாவத்தின் ஜெனிப்பித்தலில் அன்பானது முக்கியமான ஆவியாக இருக்கிறது.

இது என்ன ஆச்சரியமான ஒரு பரீட்சையாக இருக்கிறது! “நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். நீங்கள் உங்களையே சோதித்துப் பாருங்கள்” என்று அப். பவுல் ஆலோசனை கூறுகிறார். இந்த சோதனையை நாமே நமக்கு பயன்படுத்துவோமாக. தேவனுடைய மதிப்பீட்டில் நான் ஒன்றமில்லாதவனா அல்லது ஏதாவது உடையவனா என்பதை அளவிட வேண்டும். என்னுடைய அறிவு, அல்லது புகழ் அல்லது பிரசங்க திறமையைக் காட்டிலும் அவருக்கான எனது அன்பு, சகோதரர்கள் மற்றும் அவரினிமித்தமான அன்பு, பொதுவாக உலகம் இன்னும் சத்துருக்களிடம் கூட என்னுடைய அன்பு எவ்வளவு என்பதை சோதித்தறிய வேண்டும்.

நாம் அன்பின் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாமல் தேவனைக் குறித்த ஆழமான இரகசியங்களை அறிய முடியாது என்பதை நாம் அறியாமல் இருக்கக்கூடாது. ஏனெனில் தேவனுடைய ஆவியினால் மட்டுமே தேவனைப்

பற்றிய ஆழமான காரியங்களை அறிய முடியும். ஒருவன் தனக்கு கிடைத்த அறிவை இழப்பதற்கு முன் ஆவியை இழக்கக்கூடும். ஆகையால் குணலட்சண அளவில் அன்பை நாம் முதலில் வைக்க வேண்டும். நாம் தேவனை நெருங்கவும் ஏற்றுக்கொள்ளப்படவும், இதை பிரதானமான சோதனையாக கருத வேண்டும்.

### அன்பானது உண்மையான பணிவின் இரகசியம்

அன்பைக் குறித்த முக்கியமான கருத்தை கொடுத்த பின்பு அப்போஸ்தலர், அது என்னவாக இருக்கிறது, எதுவாக இல்லை, அது எப்படி இயங்குகிறது, அது எப்படி இயங்கவில்லை அல்லது அது எப்படி நடத்துகிறது என்பதைக் குறித்து விளக்குகிறார். இந்த காரியத்தை நாமே நடைமுறையில் பயன்படுத்தவும் விசாரிக்கவும் செய்வோமாக.

நான் இப்படிப்பட்ட அன்பை விசேஷமாக விசுவாச வீட்டாரிடம் கொண்டிருக்கிறேனா? அது குறிப்பிட்ட அளவு நீண்ட காலம் துன்பம் கொடுத்த பிறகும் நான் அன்புடன் இருக்கிறேனா? நல்ல நோக்கத்தின் ரூபகாரத்தை கொடுப்பவர்களிடம் அபூரணம் மற்றும் பலவீனத்தில் நான் பொறுமையுடன் இருக்கிறேனா? மகா சத்துரு ஜனங்களின் மனதை குருடாக்கியிருக்கின்றான் என்பதை உணர்ந்து, அன்பின் வெளிப்பாடு தமது விரோதிகளிடம் பொறுமையாக இருந்த நமது கர்த்தரிடம் முக்கியமாக இருந்தது என்பதை நினைத்து, வழியை விட்டு விலகிப் போனவர்களிடம் நான் பொறுமையுடன் இருக்கிறேனா?

எனது முறைமையும் குரலோசையும் எனது வாழ்க்கையின் காரியங்களில் செய்ய நிறைய இருப்பதை அறிந்து, எனது முறைகளில் அன்பாகவும் எனது நடத்தை மற்றும் குரலோசையை காவல் செய்ய நாடுகிறேனா? இந்த அன்பின் அடையாளம் எனது செயல்கள், வார்த்தைகள் மற்றும் எண்ணங்களில் பரவுகிறதா? மற்றவர்களைக் குறித்து நான் நினைக்கிறேனா, அவர்களை கவனிக்கிறேனா? வார்த்தையிலும், பார்வையிலும் மற்றும் கிரியையிலும் அவர்களிடத்தில் அன்பை உணரவும் வெளிப்படுத்தவும் செய்கிறேனா? ஒரு கிறிஸ்தவன் மற்ற அனைவரையும் காட்டிலும், வீட்டிலும் தொழில் செய்யும் இடத்திலும், சபையிலும் மற்றும் எல்லா இடத்திலும் அன்புடன், மரியாதையுடன் மற்றும் கனிவுடன் இருக்க வேண்டும். பூரண அன்பை அடையப் பெற்றதற்கு தக்கதாக, நமது இருதயத்தின் தொடர்ச்சியான முயற்சியினால் நமது வார்த்தை, கிரியை ஆகியவற்றை தூண்டுகிற சிந்தை எல்லாம் அன்பும் பொறுமையும் நிறைந்ததாக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகளிடத்தில் இந்த குணங்கள் வெளியரங்கமான அலங்காரமாக மட்டுமே இருக்கக்கூடாது; இருக்க முடியாது. மாறாக, அவைகள் ஆவியின் கனிகள், அவை தேவனுடைய ஐக்கியத்துக்கு வந்த பிறகு, அவரை அறிந்தபிறகு, அவரது பரிசுத்த ஆவியை, அன்பின் ஆவியை பெற்ற பிறகு வளர்கிறது.

"பொறாமையில்லாத" அன்பை நான் பெற்றிருக்கிறேனா? அந்த அன்பு பெருந்தன்மை உடையதாக இருக்கிறதா? மற்றவர்கள் வளம் பெற்று, அந்த செழுமையில் சந்தோஷப்படும் போது எனது காரியங்கள் அந்த அளவுக்கு செழுமை இல்லாதிருக்கும் போது நான் பொறாமை இல்லாதிருக்கிறேனா? இதுதான் உண்மையான பெருந்தன்மை; இது பொறாமைக்கு எதிரானது. அது நெறி தவறிய சுபாவத்திலிருந்து பாய்கிறது. பொறாமையின் வேர் சுயநலமாகும். அன்பின் வேரிலிருந்து பொறாமை வளராது. அன்பு சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்படும்; ஒவ்வொரு நல்ல வார்த்தையிலும், கிரியையிலும், கிறிஸ்தவ கிருபையின் முன்னேற்றத்திலும் தேவ ஆவியினால் தூண்டப்பட்டவர்களின் தெய்வீக ஊழியத்திலும் சந்தோஷப்படும்.

"தன்னைப் புகழாத, இருமாப்பாயிராத" அடக்கமுள்ள அன்பை நான் பெற்றிருக்கிறேனா? எளிமையான போக்கு உடைய அன்பு பெருமை பாராட்டி தன்னை உயர்த்தாது. நல்ல செயல்களை உடனே செய்கிற அன்பை பெற்றிருக்கின்றனா? மனிதரால் காணப்படும்படியல்ல, தேவனால் மட்டுமே காணப்படும்படி அல்லது அறியும்படி அதைச் செய்யும். அதன் அறிவையோ அல்லது அதன் கிருபைகளையோ பெருமை பாராட்டாது. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பிதாவானவரிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்பதை அடக்கத்துடன் அங்கீகரிக்கிறது. அவரது ஒவ்வொரு இரக்கத்திற்கும் அன்பையும் ஊழியத்தையும் நான் திரும்ப செலுத்துகிறேனா? சுய கௌரவத்தின் மேல் பெருமையடித்துக்கொள்ளுதல் அறிவீனத்திற்கும், சில சமயங்களில் அவனது முயற்சி வெட்கக்கேடான பாவங்களுக்கும் வழிநடத்தும். கர்த்தரின் ஆவி தெளிந்த புத்தியுள்ள ஆவி. பெருந்தன்மையை மற்றவர்களை மதிப்பதற்கு மாத்திரமல்ல தன்னை நிதானமாக மதிப்பீடு செய்யவும், தனது குணலட்சணம் மற்றும் சாதனைகள் குறித்து உயர்வாக நினைக்காதபடியும் நாட வேண்டும்.

"அயோக்கியமானதை செய்யாத" மரியாதையான அன்பை நான் பெற்றிருக்கிறேனா? பெருமை வேராயிருந்து அதிலிருந்து அயோக்கியமான நடத்தைகள், ஒழுக்கமின்மை வளர்கிறது; அறிவிலோ அல்லது பொருளாதாரத்திலோ தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணுகிறவர்களிடத்தில் இது இருக்கும். பணிவானது அற்ப விஷயங்களிலும், அன்பாக வரையறுக்கப்படுகிறது. மரியாதை சிறு காரியங்களிலும் அன்பாக கருதப்படுகிறது. பணிவின் இரகசியம் மேற்பரப்பு மெருகூட்டலாக அல்லது இருதயத்தில் உள்ள அன்பாக இருக்கிறது. கிறிஸ்தவனாக நாம் இருதய பூர்வமான அன்புடையவர்களாக இருக்க வேண்டும். அது நம்மை விசுவாச வீட்டாரிடத்தில் மாத்திரமல்ல, நமது வீடுகளிலும் நாம் உலகத்தோடு தொடர்பு கொள்ளுவதிலும் நாம் அன்புடனும் மரியாதையுடனும் நடக்கச் செய்யும்.

சுயநலமில்லாத, "தற்பொழிவை நாடாத" அன்பை பெற்றிருக்கிறேனா? அது மற்றவர்களின் அக்கறையில் தனது சொந்த உரிமைகளைக் கூட தியாகம் செய்ய விருப்பம் உடையதாக இருக்கும். அதற்கு மாறாக, ஒவ்வொரு சமயத்திலும் தனது உரிமையை கேட்கிற சுயநலம் மாத்திரமல்ல, மற்றவர்களின் வசதி, சுகம், உரிமைகள் பற்றி பொருட்படுத்துவதும் இல்லை. இந்த வகையில் நாம் அன்பை பெற்றிருக்க வேண்டும் என்றால் மற்றவர்களது நன்மையை அநியாயமாக எடுத்துக்கொள்ளாதபடி நம்மை காத்துக்கொள்ள வேண்டும். நாம் தீமை செய்வதைக் காட்டிலும் தீமையை சகிப்பதை விரும்புவோம். அநீதி செய்வதைக் காட்டிலும் அநீதியை சகிப்போம்.

### அன்பு வீட்டில் ஆரம்பிக்கிறது

இயற்கையின் பந்தத்தில் தன்னை சார்ந்து இருப்பவர்களுக்கு தேவையானதை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். எல்லா வகையிலும் "அன்பு வீட்டில் ஆரம்பிக்கிறது." சரியான கருத்து என்னவென்றால், சரியான அன்பின் ஆவியை உடைய

ஆண்களும், பெண்களும் வாழ்க்கையின் காரியங்களில் தனக்குரியதை மட்டுமே நினைக்க மாட்டார்கள். மற்றவர்களைக் குறித்து அக்கறை காட்டுவார்கள். அன்பின் இந்த அம்சத்தை அப்பியாசப்படுத்தினால் வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும், குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒரு பெரிய செல்வாக்கைப் பெற்றிருக்கும்.

"சுலபமாக கோபமூட்ட முடியாத" நிதானமான அன்பை நான் பெற்றிருக்கிறேனா? ஒரு கேள்வியின் இருபக்கங்களையும் பார்க்கக்கூடிய, பலமான தெளிந்த புத்தியுள்ள ஆவியை கொடுக்கக்கூடிய அன்பை நான் பெற்றிருக்கிறேனா? அது எரிச்சல் மற்றும் வன்முறை கோபத்தை உணரக்கூடியதாக இருக்கிறதா? வன்முறை கோபம் பொருத்தமற்றது மாத்திரமல்ல. அதைக்காட்டிலும் மோசமானதாக, காயத்தை உண்டு பண்ணக்கூடியதாக இருக்கிறது. அதன் பலனால் எனது சொந்த இருதயமும் சரீரமும் காயமடைகிறது.

கொள்கைகள் சம்பந்தப்பட்டிருக்கும் போதும் மதிப்புமிக்க பாடங்கள் புகுத்தப்படும் போதும் அன்பானது மிகவும் உறுதியாக இருக்க வேண்டிய நேரம் வரும். அப்பொழுது நீதியான கோபம், சரியான வார்த்தையை பயன்படுத்தி அன்பின் நோக்கத்திற்காக, நன்மை செய்யும் நோக்கத்திற்காக, கையாளப்படும். ஆனால் அது ஒரு நேரத்துக்கு மட்டுமே கையாளப்பட வேண்டும். நீதியான கோபம் நமக்கு வரக்காணும் போது, நாம் உதடுகளினாலோ, இருதயத்தினாலே பாவம் செய்யக்கூடாது. அந்த சமயத்தில் உடனே அன்பான, பெருந்தன்மையான மனோபாவத்தை நமது எதிரிகளிடமோ அல்லது நாம் போதிக்கக்கூடிய உதவி பண்ணக்கூடிய நண்பர்களிடமோ காட்ட வேண்டும்.

வெறித்தனம், கெட்ட குணம், முன்கோபம், குற்றம் செய்வதற்கு விரையும் தன்மை முதலானவை சுலபமாக தூண்டப்பட முடியும். இது அன்பின் ஆவிக்கு முற்றிலும் மாறானது. தேவனை பிரியப்படுத்தவும் ஜெயங்கொண்டவர்களின் நிலையை அடையவும் நாடி, அவரது பக்கம் இருப்பவர்கள் நமது நாளின் பொதுவான சூழ்ச்சிகளுக்கு தங்களை காத்துக்கொள்ள வேண்டும். இந்த பண்புகள் எந்த அளவுக்கு வளர்க்கப்படுகிறதோ அல்லது விரும்பி அடைக்கலம் கொடுக்கப்படுகிறதோ அல்லது அதற்கு எதிராக போராடவில்லையோ, அது நமது பிதாவானவரின் பரிசுத்த ஆவியில் அபிவிருத்தியில் அபூரணத்தையும், குறைவையும் காண்பிக்கிற ரூபகாரமாக ஆகிறது; நமது முன் மாதிரியாகிய நமது கர்த்தராகிய இயேசுவின் சாயலில் குறைவு படுவதற்கும் ரூபகாரமாகிறது. ஒருவரிடமிருந்து பெறக்கூடிய ஒரு தவறான ஆவியின் சில ரூபகாரங்கள் அதைத் தொடர்வதற்கான சாக்குபோக்கும் அன்புடன் இருக்கின்றன. எனினும் இயற்கையான சீரழிவு, பரம்பரையான பலவீனங்கள் ஆகியவை எரிச்சல், குறைவாக பேசுதல், முன்கோபம் ஆகியவற்றிற்கு வழி நடத்தக்கூடும். கர்த்தரின் ஆவி நிறைந்திருக்கும் அனைத்து இருதயமும் அவனது மாம்சத்தில் தீமைக்கான இந்த பண்பை எதிர்த்து, அதற்கு எதிராக நல்ல போராட்டத்தை போராட வேண்டும்.

"இது என்னுடைய வழி" என்று சொல்லக்கூடாது. ஏனெனில் விழுந்து போன சுபாவத்தின் வழியெல்லாம் தவறானது. பழைய சுபாவத்தின் இந்த பண்பையும், மாம்சத்தின் மற்ற வேலைகளையும் பிசாசையும் எதிர்ப்பதே புது சிருஷ்டியின் வேலை. அன்பின் கிருபையின் வல்லமையை குறைவான வழிகளில் நமது நண்பர்களுக்கும் வீட்டாருக்கும் காண்பிக்கலாம். இந்த கிருபை வளர்வதினால் தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரும் இனிமையான சுபாவம் உடையவராக மாற வேண்டும். நமது அனுதின வாழ்க்கையில் அன்பின் ஆவியை காண்பிப்பதைத் தவிர வேறு எந்த வழியிலும் நம்மை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரின் புண்ணியங்களை சிறப்பாக அறிவிக்க முடியாது.

## அன்பு தீங்கு நினையாது

தீங்கு நினையாத அன்பை நான் பெற்றிருக்கிறேனா? அது காயமற்றதாக, தீமையற்றதென சந்தேகத்திற்கு இடமில்லாததாக, மற்றவர்களின் தவறை கண்டுபிடிக்கும் நோக்கம் இல்லாததாக, தீமையான நோக்கத்தோடு கற்பியாததாக இருக்கும். அது மற்றவர்களின் நடத்தையை அன்புடன் விளக்க நாடக்கூடிய அன்பை நான் பெற்றிருக்கிறேனா? இருதயத்தின் நோக்கங்களை தவறு என எதிர்த்து நிற்பதைக் காட்டிலும் தீர்மானிக்கும் போது தவறுகளுக்கு எல்லா சலுகைகளையும் கொடுக்கிறேனா? பூரண அன்பு நல்ல நோக்கத்தை உடையதாகவே இருக்கும். இதே நிலைப்பாட்டில் மற்றவர்களின் வார்த்தைகள் மற்றும் நடத்தைகளை நோக்க தன்னால் முடிந்தவரை முயற்சிக்கும். அது பகை உணர்வுகளையும் சந்தேகத்தையும் சேர்த்து வைக்கவோ, தீய நோக்கத்தோடு சங்கிலி போன்ற சூழ்நிலை சார்ந்த ரூபாகரங்களை ஏற்படுத்தவோ செய்யாது. "அன்பு லேசாக இருக்கும் இடத்தில் கறைகள் அதிகமாக இருக்கும்" என்பது மிகவும் ஞானமான பழமொழி.

றூனால் அன்பானது குற்றங்களை பொருட்படுத்தாமல் மனக்கசப்புகளை வைக்காமல் கடந்து சென்றால், அன்பானது தீமை செய்தவர்களையும் நண்பர்களைப் போல பாவிக்கும் என்று பொருளல்ல. குற்றங்களை கவனிப்பது மிகவும் அவசியமாக அல்லது மிகவும் சரியானதாக இருக்க வேண்டும். முன்னர் இருந்தது போல அதே அன்புடன் வெளிப்படுத்தக் கூடாது. ஆனால் பகைகள், வன்மம் அல்லது சண்டைகளை வெளிப்படுத்தக்கூடாது. அன்பு மற்றும் தயவுடன் முழு ஒப்புரவாகுதலுக்காக திறந்திருக்கும் சந்தர்ப்பக் கதவை முடிந்தவரை சீக்கிரத்தில் விலகி ஒரு ஒப்புரவாகுதலை ஊக்கமளித்து தவறை மன்னிக்கவும் மறக்கவும் விருப்பத்தை வெளிப்படுத்தக்கூடும்.

## "அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது"

நான் அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுகிற உண்மையான அன்பை பெற்றிருக்கிறேனா? நல்லது மற்றும் கெட்டது பற்றிய கொள்கைகளை என்னுடைய மனதில் உறுதியாக வைத்திருக்கிறேனா? நான் தவறிலிருந்து முற்றிலுமாக விலகி, நன்மையானதுடன் முழுமையாக இணக்கமாக இருக்கிறேனா? தீமை எதிர்படும் போதெல்லாம் நான் துக்கப்படுகிறேனா? தீமைக்குள் விழுந்தவர் அல்லது சோதனையினால் சூழப்பட்டவர்கள் மீது அனுதாபம் கொள்கிறேனா? தவறானது எனக்கு நன்மை கொடுத்தாலும் அதை நான் ஊக்கப்படுத்தாமல் எதிர்க்கிறேனா? சத்தியத்திலும் அதன் செழிப்பிலும் நான் களிப்பாயிருப்பதை நான் தவிர்க்க முடியாமலும் அது என் முந்தைய கருத்துக்களை கவிழ்த்துப் போடாமலும் அல்லது எனது பூமிக்குரிய சில நன்மைகளில் சேதம் ஏற்பட்டாலும் நான் சரியானதற்கும் சத்தியத்திற்கும் இசைந்திருக்கிறேனா?

தனது இருதயத்தில் பரிபூரண அன்பாகிய பரிசுத்த

ஆவியை அபிவிருத்தி செய்ய நாடுகிறவர்கள் இந்த நேர்மையிலும் உண்மைத் தன்மையிலும் தங்களை ஜாக்கிரதையாக காத்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் அல்லது பொருளின் வீழ்ச்சியில், சந்தோஷப்படுதல், அது எந்த அளவில் நீதியையோ அல்லது நன்மையையோ குறிப்பிட்டாலும் அது வருத்தம் தெரிவிக்கப்பட வேண்டும் அல்லது ஜெயங்கொள்ளப்பட வேண்டும். பூரண அன்பு எந்த நிலையிலும் அல்லது சூழ்நிலையிலும் அநியாயத்தில் சந்தோஷப்படாது. மற்றவனுடைய வீழ்ச்சி தனக்கு முன்னேற்றத்தைக் கொடுத்தலும் அது வருத்தப்படக் கூடியதாக இருக்கும்.

இங்கே கர்த்தரின் ஜனங்களின் ஆவி என்று அப்போஸ்தலர் விளக்குகிற தேவனுடைய அன்பு எல்லா சுயநலத்திற்கும் மிகவும் மேலான ஒரு அன்பாக இருக்கிறது. அது நிலையான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அது நாளுக்கு நாள் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டு எந்த சூழலிலும் எப்பொழுதும் உறுதியாக கடைபிடிக்கப்பட வேண்டும். அன்பானது அதில் பங்கு பெறாதிருப்பது லாபகரமான தவறாக இருக்கும். தீமைக்கு வெகுமதி கொடுக்க விரும்பாது. ஆனால் அது சத்தியத்தில் சந்தோஷப்படும். அனைத்து பாடத்தைப் பற்றிய சத்தியத்திலும், விசேஷமாக தெய்வீக வெளிப்படுத்துதலின் சத்தியத்திலும், அது பிரபலமடையாத சத்தியமாக இருந்தாலும், அதை பிரசங்கித்தால் துன்பம் வந்தாலும் உலக நட்பையும் இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டவர்களின் நட்பையும் இழந்தாலும் அது சத்தியத்தில் சந்தோஷப்படும். சத்தியத்திற்கெதிராகவும், அதன் ஊழியக்காரர்களுக்கு எதிராகவும் இழப்புகளும், துன்பங்களும் துயரங்களும் மற்றும் இன்னும் என்ன வந்தாலும், அன்பின் ஆவியானது சத்தியத்தின் மீது அப்படிப்பட்ட ஒரு ஈர்ப்பை பெற்றிருக்கிறது. நாம் அவரைக் குறித்தோ அவரது வசனத்தைக் குறித்தோ வெட்கப்பட்டால் கர்த்தருடைய மதிப்பீடும் அப்படியே இருக்கும். அவரது பரிசுத்தவான்களில் அவர் மகிமை அடைந்தவராக வரும் போது, அப்படிப்பட்ட அனைவரையும் குறித்து அவர் வெட்கப்படுவார் என்று அவர் அறிவிக்கிறார்.

தீமையின் தாக்குதலுக்கு அசையாத, “சகலத்தையும் தாங்குகிற” அன்பை நான் பெற்றிருக்கிறனோ? அது தீங்கு, அசுத்தம், பாவம் மற்றும் அன்புக்கு எதிராக இருக்கிற அனைத்தையும் எதிர்க்கிறதா? தேவனினிமித்தம் அது பழிச்சொல், கண்டிப்புகள், அவமதிப்பு, இழப்புகள், தவறான சித்தரிப்பு இன்னும் மரணத்தைக் கூட சகிக்கவும் விருப்பமும் வல்லமையும் கொண்டிருக்கிறதா? “உன்னுடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.” கர்த்தருக்கும் அவருடையவர்களுக்குமான அன்பின் பரிசுத்த ஆவியும் உலகிற்கு அனுதாப அன்பை மையமாகவும் ஜீவனாகவும் கொண்டதாக விசுவாசம் இருக்கிறது. பூரண அன்பானது தேவனுடைய கிருபையினால் எல்லா சூழ்நிலைகளிலும் சகலத்தையும் தாங்கக்கூடியதாக இருக்கும். நம்மை அது ஜெயங்கொண்டவர்களாகவும் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வெற்றிகரமாக செய்து முடிக்கும்.

**அன்பானது சந்தேகம் நிறைந்ததல்ல**

சகலத்தையும் விசுவாசிக்கக்கூடிய அன்பை நான் பெற்றிருக்கிறேனா? மறுக்க முடியாத ரூபகாரங்கள் இருந்தால் ஒழிய அது மற்றவர்கள மேல் பழி சுமத்த விருப்பமில்லாதிருக்கிறதா? அது மற்றவர்களிடம் தீமையைக் காட்டிலும் நல்லதை நம்புகிறதா? அது தீமையை கேட்க விருப்பப்படாமல் அதை வெறுக்க முனைகிறதா? பூரண அன்பானது சந்தேகப்படாமல் சகலத்தையும் நம்பும். அது இந்தக் கொள்கையோடு கிரியை செய்கிறது: சந்தேகக் கண்ணோடு பார்ப்பதைக் காட்டிலும் நூறு தடவை ஏமாற்றப்படுவதை ஏற்றுக்கொள்ளும். ஒரு மனிதனை அநியாயமாக சந்தேகப்படுவது அல்லது குற்றம் சாட்டுவதைக் காட்டிலும் இது மேலானது. அந்த இரக்கமுள்ள மனப்பான்மை எண்ணத்திலும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆண்டவர் கூறினதாவது: “இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.” (மத். 5:7) இரக்கமற்ற, தீமையை சிந்திக்கிற சிந்தை மற்றவர்களிடம் இரக்கமில்லாமல் நடக்கும்.

“சகலத்தையும் நம்பக்கூடிய” அன்பை நான் பெற்றிருக்கிறேனா? சாதகமற்ற சூழ்நிலைகளில் முயற்சி செய்து, எனது உதவி தேவைப்படுகிறவர்களுக்கு தொடர்ந்து நம்பிக்கையுடன் ஊழியம் செய்கிறேனா? “சகலத்தையும் சகிக்கக்கூடிய” அன்பை பெற்றிருக்கிறேனா? அனைத்தையும் தொடர்ந்து நம்பி, சிறந்தவற்றிற்காக முயற்சி செய்கிறதா? பூரண அன்பு சுலபமாக மனம் சோர்ந்து பேசாது. இதுவே அன்பின் விடா முயற்சியின் இரகசியமாகும். அது தேவனை அறிந்து அவரது பரிசுத்தத்தில் பங்கு பெறுகிறதாகி, அவரிடத்தில் நம்பிக்கை வைத்து, அருகே சுற்றிலும் இருளாக இருந்தாலும், அவரது கிருபையான உடன்படிக்கையின், நிறைவேறுதலுக்காக மனம் தளராமல் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

அன்பின் இந்த நம்பிக்கையான பகுதி பரிசுத்தவான்களின் விடா முயற்சிக்கும் கவனத்தை ஈர்க்கும் அம்சங்களில் ஒன்று, அவர்களை நல்ல போர் வீரர்களாக கடினத்தன்மையை சகிக்க சாத்தியப்படுத்துகிறது. அதன் நம்பிக்கையான குணம் சுலபமாக மனம் புண்படுகிறதையும், கர்த்தரின் வேலை சுலபமாக நிறுத்தப்படுகிறதையும் தடை செய்கிறது. மற்றவர்கள் சோர்வடையும் போது, நல்ல போராட்டத்தை போராடவும் நமது இரட்சிப்பின் அதிபதியை சந்தோஷப்படுத்தவும் அன்பின் ஆவி தாங்குகிற திறனை கொடுக்கிறது. அன்பின் நம்பிக்கை நம்பிக்கையின்மையை அறியாது. ஏனெனில் அதன் நங்கூரமிடும் இடம் திரைக்கப்பால் நுழைந்து, யுகங்களின் கன்மலையில் உறுதியாக பிணைக்கப்படுகிறது.

அன்பானவர்களே, நாம் இதுவரை பார்த்ததிலிருந்து நாம் அன்பை பெறுவோமாக, வார்த்தையில் மாத்திரமல்ல கிரியையிலும் உண்மையிலும் பெறுவோமாக. புதிய இருதயத்தில் வேரைப் பெற்றிருக்கும் அன்பானது நமது பரம பிதாவின் அன்பினால் நம்மில் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நமது பிரியமுள்ள இரட்சகரின் வார்த்தையிலும் கிரியையிலும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. நாம் அன்பை உறுதிப்படுத்தவில்லை என்றால் நாம் தேடிப்பெறப்பட்ட அனைத்தும் வீணாகப் போய் விடும்!

**R4919** **DO NOTHING WHERE BY THY BROTHER STUMBLETH**

# உன் சகோதரன் இடறுகிறதற்கேதுவான எதையும் செய்ய வேண்டாம்

"மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாக இருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமல் இருப்பதே நன்மையாயிருக்கும்." ரோமர் 14:21

தேவனுடைய பிள்ளைகளின் சுதந்தரத்தில் கட்டுப்பாடு விதிப்பதற்காக அப்போஸ்தலர் முயற்சிக்கவில்லை என்பது இந்த வார்த்தைகளின் மூலம் தெளிவாகிறது. கிறிஸ்துவின் சுயாதீனம் நம்மை விடுதலையாக்குகிறது என்று வேறு இடத்தில் அப்போஸ்தலர் அறிவிக்கிறார். பாவகரமான மற்றும் நமக்கே காயம் ஏற்படக்கூடிய காரியங்களை செய்வதற்கு நமக்கு சுயாதீனம் கொடுக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிடுகிறார். மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய காரியங்களிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டும் என்பது கர்த்தருடனான நமது உடன்படிக்கை மற்றும் சலுகையின் ஒரு பகுதியாக இருக்கிறது. மற்றவர்களுக்கு உதவி பண்ணுவதற்கு நமது வாழ்க்கையை ஒழுங்குபடுத்த நாட வேண்டும். நமது சுயாதீனத்தை மாம்சத்திற்காக மட்டும், நமது சுய திருப்திக்காக மட்டும் பயன்படுத்தக் கூடாது. நாம் நீதியின் பிரதிநிதியாக இருந்து, "யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கும் நன்மை செய்யக்கடவோம்." (கலாத்தியர் 6:10)

இந்த வசனத்தில் அப்போஸ்தலர் மாம்ச உணவு மற்றும் மரக்கறி உணவுக்கு இடையேயான வித்தியாசமான வெறும் கருத்தை கூறவில்லை. இப்படிப்பட்ட கேள்வியை ஒவ்வொருவரும் தாங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஒருவர் மாம்ச உணவு அவருக்கு தீங்கு விளைவிக்கும் என்று கண்டால் அவர் அதிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக மாம்ச உணவு பிரயோஜனமானது என்று கண்டால் அவர் அதை பயன்படுத்த வேண்டும். மாம்சத்தை புசிப்பதைக் குறித்து நமது அப்போஸ்தலரின் கருத்து மத நம்பிக்கையை பற்றியதாகும். அந்த காலப்பகுதியில் மனிதர் விக்கிரகத்துக்கு படைக்கப்பட்ட மாம்சத்தை உண்ணுவது பழக்கத்தில் இருந்தது. எந்த யூதனும் அதை புசிக்கமாட்டான். ஆனால் கிறிஸ்தவர்களிடத்தில் அது வேறு மாதிரியாக இருக்கலாம். அவன் மர விக்கிரகங்கள் முதலானவைகளுக்கு முன்பாக அசைவாட்டிய மாம்சம் பாதிப்பை ஏற்படுத்தாது என்று புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் விக்கிரகத்துக்கு படைக்கப்பட்ட மாம்சத்தை உண்ணுவது குற்றம் என்று காண்பிக்கிறார்.

நமது மனசாட்சி மிகவும் முக்கியமானது என்பதும் அதற்கு எப்பொழுதும் கீழ்ப்படிய வேண்டும் என்பதும் அப்போஸ்தரின் கருத்து. ஒரு சகோதரன் மற்றவரின் மனசாட்சியை மீறி மாம்சத்தை புசிப்பது அந்த சகோதரனுக்கு இடறுதலையும் தீமையையும் விளைவிக்கும். இப்படியாக பலமுள்ள சகோதரன் பலவீனமுள்ள சகோதரனுக்கு தீங்கு விளைவிக்கலாம். இதைத்தான் அப்போஸ்தலர் அர்த்தங்கொள்ளகிறார். இதை நம்மைப் போன்று தெளிவாக காண முடியாத சகோதரனின் விஷயத்தில் அவனது மனசாட்சியை உடைக்க நாம் நாடாமல் இருப்பது மட்டுமல்ல, நமது செல்வாக்கும் அதை உடைக்க அனுமதிக்கக் கூடாது.

ஒரு பலவீனமுள்ள சகோதரனுக்கு நமது நிலைப்பாட்டிலிருந்து காரியத்தை விளக்குவது நமக்கு சரியானதாக இருக்கும். அது இவனது மனசாட்சியை உடைக்க நாடுவதாக இராமல், அவனுக்கு கற்பிப்பதாக இருக்கும். அவன் பயமில்லாமல் அவனது மனசாட்சிக்கு எதிராக இல்லாமல் அப்படிப்பட்ட மாம்சத்தை புசித்தால், நாம் அவனை பலவீனனாக அல்ல, பலமுள்ளவனாக ஆக்கியிருக்கிறோம். அது அவனுக்கு அனுகூலமாக இருக்க வேண்டும். சகோதரனது விருப்பத்திற்கு இசைவாக இருக்க நாட வேண்டும் என்று அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார்.

### மற்றவர்களுக்காக சுயத்தை வெறுத்தல்

பரிசுத்த பவுல் இங்கே மற்றவர்களுக்காக சுயத்தை வெறுத்தல் என்ற பரந்த கொள்கையை வெளிப்படையாக வைக்கிறார். அந்த கொள்கை சபைக்கு முதல் நிலையில் பொருந்துகிறது; உலகத்துக்கும் பொருந்துகிறது. அவர் இந்த கொள்கையை மதத்திற்கு மாத்திரம் பயன்படுத்தாமல், விக்கிரகத்துக்கு படைக்கப்பட்ட மாம்சத்தை புசித்தலுக்கும் பயன்படுத்துகிறார். இன்னும் அவர் விரிவுப்படுத்தி கூறுவதாவது: "மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுதலுக்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுத்துகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்."

மதுபானம் பண்ணுவது பலவீனமுள்ள சகோதரனுக்கு ஒரு பெரிய சோதனையாக, ஒரு கண்ணியாக இருக்கலாம். வேத வாக்கியங்களில் மதுபானத்தை தடை செய்து எதுவும் சொல்லப்படவில்லை. மேலும் வயிறு தொந்தரவுக்கு தீமோத்தேயுவுக்கு அதை பயன்படுத்தும்படி அப்போஸ்தலர் பரிந்துரைக்கிறார். எனினும் சுற்றுப்புறங்களினால் நமது சுதந்தரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். மதுபானம் இப்பொழுதைக் காட்டிலும் அப்பொழுது அதிகமாக பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டைக் காட்டிலும் ஐரோப்பாவில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. எனினும் மதுவின் விளைவால் ஜனங்களின் நரம்பு இப்பொழுது அதிகமாக பாதிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். ஆகையால் நமது இனம் நமது கர்த்தரின் நாளைக் காட்டிலும் இப்பொழுது பலவீனமாக இருக்கிறது.

இந்த விதத்தில் நமது கர்த்தரும் அப்போஸ்தலரும் மிதமாக இதை பயன்படுத்தியதில் குறிப்பிடப்பட்ட ஆபத்து ஏதும் இருக்கவில்லை. மிதமாக பயன்படுத்தும்படி ஆலோசனைகள் கூறினார்கள். "ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1கொரிந்தியர் 10:31) எந்த வகையிலாவது ஒரு சகோதரனை இடறுதல் பண்ணுகிற அளவுக்கு நமது சுயதீனத்தை பயன்படுத்தக்கூடாது. தேவனுடைய பிள்ளைகள் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்காக நமது சுயதிருப்தியை தியாகம் செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாம் புரிந்துகொண்ட வகையில் நமது இனத்திற்கு போதையானது மிகவும் பயங்கரமான தீமையாக தற்காலத்தில் இருக்கிறது. விழுந்துபோனதினிமித்தம் நமது இனம் பரம்பரையாக பலவீனமாக இருக்கிறது. இதனால் அவர்கள் போதையை முற்றிலுமாக எதிர்க்க முடியாதிருக்கிறார்கள். கர்த்தருக்கும் நீதிக்கும் மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காகவும் தங்கள் ஜீவனை அர்ப்பணம் செய்தவர்களிடம், இந்த காரியத்தில் அவர்கள் தங்களைத் தாங்களே வெறுத்து, சில சுயாதீனங்களையும் சலுகைகளையும் சகோதரர்களின் நன்மைக்காகவும் பொதுவாக உலகத்திற்காகவும் கொடுக்க சொல்லுவது அதிகமானதாக இருக்குமா?

எதிராளியானவன் மனக்குலத்தை பாவத்திற்குள் இழுப்பதற்கு பயன்படுத்துகிற புகையிலை, இன்னும் பல்வேறு செயல்பாடுகளைக் குறித்தும் இதே வாதங்கள் பயன்படுத்தப்படலாம். நாம் கர்த்தரின் கிருபைகளிலும் அவரது ஆவியிலும் வளருகிறதற்கு தக்கதாக நாம் சந்தோஷப்பட வேண்டும். நமது சொந்த நலனுக்காக மாம்சத்தின் சகல அசுத்தங்களையும் நீக்கிப் போட்டு, இப்படியாக கர்த்தரைப் போல ஆகவும் மாத்திரமல்ல, அன்பின் தூண்டுதலால் மற்றவர்கள் மேல் தீமையை வருவிக்கும் சகலத்தையும், அவை நமது சொந்த சுயாதீனமாக இருந்தாலும் நம்மை விட்டு நீக்க வேண்டும்.

இந்த கொள்கையின் இன்னொரு விளக்கம் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பில் இருக்கும். ஓய்வு நாளில் நெருப்பைக் கூட பற்ற வைப்பது தவறு என்று யூதர்கள் நினைத்தார்கள். அந்த நாளில் விறகு பொறுக்கினவன் கல்லெறிந்து கொல்லப்பட்டான். மற்ற நாட்களில் செய்வது போல ஞாயிற்றுக்கிழமையில் செய்தால் அது தவறு என்று நாம் நினைப்பதில்லை. இந்த சுயாதீனத்தை பயன்படுத்துவது ஞானமாக இருக்குமா? நமது நடக்கை மற்றவர்களுக்கு தீங்கான விளைவை ஏற்படுத்தலாம். ஆகையால் மத ரீதியில் சொல்லக்கூடியவைகளை நாம் குறைக்க வேண்டும். "இந்த ஜனங்கள் நல்லவர்கள் இல்லை, அவர்கள் தேவனுடைய பரிசுத்த நாளை ஆசரிக்கமாட்டார்கள்" என்று அவர்கள் கூறலாம். அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள்.

உலகத்தில் உள்ள மற்ற ஜனங்களைக் காட்டிலும் நாம் ஞாற்றுக்கிழமையை நல்லவிதமாக கடைபிடிக்க வேண்டும். உண்மையில் மற்ற ஜனங்களைக் காட்டிலும், நாம் அதை மிகவும் சிறப்பாக கைக்கொள்ளுகிறோம். இது சரியானது. கிறிஸ்தவ தேசத்தின் இந்த தவறு நமக்கு நன்மைக்கு ஏதுவாக நடந்திருக்கிறது. நாம் ஞாயிறை கடைபிடிக்க வேண்டியதில்லை என்று நாம் கூறுவதாக உலகமானது புரிந்து கொண்டிருக்கிறது. ஒரு வாரத்தில் மூன்று அல்லது நான்கு ஞாயிறுகள் இருந்தால் நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். உண்மையில் நமக்கு ஒவ்வொரு நாளும் ஞாயிறாக இருக்க வேண்டும். நாம் தேவனுக்கு ஊழியம் பண்ண நாடுகிறோம். வாழ்க்கையின் முக்கிய நோக்கம் சுவிசேஷத்தை போதிப்பதும், தேவனுடைய வார்த்தையின் செய்தியாகிய "நற்செய்தியில்" சந்தோஷப்படுவதும் ஆகும்.

புது சிருஷ்டியாக, தேவனுடனான நமது உறவு ஒரு இருதய பூர்வமான உறவாகும். கர்த்தர் நமக்கு கொடுக்கிற ஆசீர்வாதம் புதிதாக ஜெனிப்பிக்கப்பட்ட பிள்ளைகள், மாம்சீக ரீதியின்படியல்ல. ஆவியின் ரீதியின்படி, இருதய முன்னேற்றத்தையும் தருகிறார். அது முடிவாக உயிர்த்தெழுதலில் பூரணப்படும்.

உண்மைதான், "குமாரன் உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான் 8:36) "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிருக்க" நாம் அனைவரும் நாட வேண்டும். (கலாத்தியர் 5;1) நம்மைக் காட்டிலும் பலவீனமான மற்றவர்கள் இடறுதல் அடையாதபடி நமது சுயாதீனத்தை பயன்படுத்தி நம்மை காத்துக்கொள்ள வேண்டும் என்பதும் உண்மை. சில சமயங்களில் அறிவுக் குறைவினால் கிறிஸ்துவின் சுயாதீனத்தை பயன்படுத்த இயலாமல் போகும்.

கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தை இரண்டு நிலைப்பாட்டில் நோக்க வேண்டும். அது தடையில்லாமல் புசிப்பதற்கு நமக்கு சுயாதீனம் கொடுக்குமானால், யூதர்கள் புசிப்பதற்கு சுயாதீனம் ஒரு வகையில் இல்லாதிருந்தது போல, அதிலிருந்து விலகியிருக்கவும் நமக்கு சுயாதீனம் கொடுக்கிறது. கிறிஸ்துவின் ஆவியைப் பெற்று அவரது அடிச்சுவட்டை பின்பற்ற நாடுகிறவர்கள் முன்னரே கர்த்தரின் சுயாதீனத்தை பயன்படுத்த உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். மாம்சீக ஆசைகள், இலட்சியங்கள் மற்றும் பசியுணர்வை விருத்தி செய்ய அல்ல, சுய தியாகத்தில், ஆண்டவரின் அடிச்சுவட்டை பின்பற்றி, சகோதரர்களுக்காக, அவர்களது உதவிக்காக தனது ஜீவனையும் கொடுப்பதற்கு நாடுவதற்காகும். சுயாதீனத்தின் இந்த இரண்டுவித பயன்பாடு எப்படி வித்தியாசமாக இருக்கிறது! அதன் சுயநல பயன்பாடு, அதே போல அறிவின் சுயநல பயன்பாடு, மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாமல் சுய திருப்தியைக் குறிக்கிறது.

## நமது சகோதரருக்கான நமது பொறுப்பு

அறிவு என்பது ஆவியில் ஒரு பெரிய வளர்ச்சியை குறிப்பதில்லை. சிறிதளவு சோப்பு ஒரு பெரிய காற்றுக் குமிழியை **(air bubble)** உண்டாக்கும். அதே போல சிறிதளவு அறிவு குணலட்சண திடத்தன்மை இல்லாமல் ஒருவனை மிகைப்படுத்திக் காண்பிக்கக்கூடும். ஆகையால் ஒருவன் தான் வெறும் அறிவில் மாத்திரம் வளர்ந்திருப்பதைக் காட்டிலும் அன்பில் வளர்ந்திருப்பதை அளவிடுவது மிகவும் நன்மை பயக்கும். எனினும் அன்பு மற்றும் அறிவிலும் வளர்வது சீர்மை நிலைமையாக இருக்கும். அப்போஸ்தலர் "சகல அறிவை அறிந்தாலும் அன்பு எனக்கு இராவிட்டால் நான் ஒன்றுமில்லை" என்று கூறி இதே பாடத்தை போதிக்கிறார்.

அன்பில்லாத அறிவு தீமை பயக்கும் அல்லது உண்மையான அறிவு இன்னும் பெறப்படவில்லை என்பதைக் குறிக்கும். ஆனால் இதற்கு மாறாக, அதே அப்போஸ்தலர் கூறுவதாவது: "தேவனில் அன்பு கூருகிறவன் எவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்." (1 கொரிந்தியர் 13:2; 8:3) நாம் அதிக அறிவைப் பெறலாம். எனினும் தேவனை அறியாதிருந்து, தேவனால் அறியப்படாமல் இருக்கலாம். கர்த்தரை தனிப்பட்ட முறையில் அறியாதிருந்து, அவருடனான ஐக்கியத்தின் மூலமாக

அன்பின் ஆவியை பெறாமல் யாரும் உண்மையான அன்பை தனது குணலட்சணத்தில் பெற்றிருக்க முடியாது. எனவே அன்பை பெற்று (இப்படியாக பெருமையை தவிர்த்து) ஆவியின் பல்வேறு கிருபைகளாகிய சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு. அறிவு, பரத்திலிருந்து வரும் ஞானம் மற்றும் தெளிந்த புத்தியுள்ள ஆவி முதலானவைகளில் நாம் குறிப்பிடத்தக்க அளவில் அபிவிருத்தி அடைவது நிச்சயம்.

அறிவையும் சுயாதீனத்தையும் உறுதி செய்த பிறகு அன்பானது மற்றவர்கள் மேல் சுயாதீனத்தின் பலனை பயன்படுத்துவது குறித்து பார்க்கும் உணர்வு, பகுத்தறியும் திறன் முதலான மனநிலைமையின் வேறுபாட்டால் எல்லோரும் அறிவின் நிலைப்பாடு மற்றும் கொள்கைகளை மதித்து உணர்தலில் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்வார்கள். ஆகையால் அன்பானது, அறிவையும், சுயாதீனத்தையும் அப்பியாசப்படுத்துவது மற்றவர்களுக்கு தீமை பயக்கும் என்பதை உணர்ந்தால் அவற்றை பயன்படுத்துவதை தடை செய்யும்.

**மனசாட்சியை மீறுவது தவறு**

ஆனால் ஏன்? மற்றவரின் மனசாட்சியை கவனிப்பதற்கு தெளிவான மனசாட்சியுடைய ஒருவர் மேல் கடமையை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட கொள்கை என்ன? பலவீன மனசாட்சியுடைய ஒருவர் தனது சொந்த மனசாட்சியை பொறுப்பு எடுத்துக்கொண்டு அவரது மனம் விரும்பியபடி புசிக்கவோ, புசிக்காதிருக்கவோ ஏன் பொறுப்பெடுத்துக் கொள்ளக்கூடாது? அது நடக்கக் கூடுமானால் அது சரியானதாக இருக்கும் என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். மனபலவீனம் உடையவர், பகுத்தறிவும் திறனில் பலவீனமானவர் எல்லா காரியங்களிலும் பலவீனமாக இருப்பார். ஆகையால் அவரது மனசாட்சிக்கு ஏற்றுக்கொள்ளாத பாதைகளில் மற்றவர்களின் வழிநடத்துதல் பாதிப்புக்குள்ளாக்கக் கூடியதாக இருக்கும். காரணம் அவரது பலவீனமான பகுத்தறியும் திறன் அல்லது தாழ்ந்த அறிவு ஆகும்.

ஒருவன் மனசாட்சியை மீறாமல் அவனது மனசாட்சிக்கு தீங்கு இல்லாமல் விக்கிரத்துக்கு படைக்கப்பட்ட மாம்சத்தை புசிக்கவும் இன்னும் விக்கிரக கோவிலில் விருந்தில் உட்காரவும் செய்யலாம். ஆனால் அப்படிப்பட்ட மார்க்கம் தவறு என்று உணருகிற மற்றவன், தனது அந்நிய சகோதரனின உதாரணத்தை பின்பற்ற முயற்சித்தால், அது அவனது மனசாட்சியை மீறுவதாக இருக்கும். அது அவனுக்கு பாவத்தை உண்டாக்கும்.

செய்யும் காரியம் சரியானதோ அல்லது தவறானதோ மனசாட்சியை மீறுகின்ற ஒவ்வொன்றும் மனப்பூர்வமாக பாவம் செய்கிறதற்கான ஒரு படியாகும். அது கீழ்நோக்கிய போக்கு. அது மேலும் மேலும் கர்த்தரின் ஐக்கியம் மற்றும் தோழமையை விட்டுபோவதாகும். ஆகையால் அது இரண்டாம் மரணத்துக்கு வழிநடத்தும். இந்த காரியத்தைக் குறித்து அப்போஸ்தலர் குறிப்பிடுவதாவது: “பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? அவனுக்காக கிறிஸ்து மரித்தாரே.” விக்கிரகத்துக்கு படைக்கப்பட்ட மாம்சத்தை புசித்தல் பாவமாகும் என்பதல்ல கேள்வி. ஆனால் நமது சகோதரனுக்கு இடறுதலை உண்டாக்க காரணமாக இருக்கக்கூடிய எதையும் செய்வது அன்பின் ஆவிக்கு, புது சிருஷ்டியின் பிரமாணத்துக்கு விரோதமான பாவமா என்பது தான். சபைக்கு கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனுக்கு மாத்திரமல்ல, மாம்சத்தின்படியான உடன் தோழர்களுக்கும் விரோதமான பாவமா என்பது தான். ஏனெனில் முழு உலகத்தின் பாவத்திற்காகவும் கிறிஸ்து மரித்திருக்கிறாரே.

நாம் கர்த்தருடன் நமது நிலைப்பாட்டை எடுப்போமாக. நமது சுயாதீனத்தை பயன்படுவதில் மற்றவர்களுக்கு தீமை பயக்காதபடி தீர்மானிப்போம். இல்லையென்றால் அதை பயன்படுத்த மறுப்போம். நமது இரட்சகர், நமது ஆண்டவர் அவர் பெற்றிருந்த அனைத்தையும் கொடுத்தது போல், நாம் நமது சுயாதீனத்தை மற்றவர்களின் நன்மைக்காக தியாகம் செய்வோம். நாம் அப்போஸ்தலரின் வார்த்தைகளை பின்பற்றுவோமாக. சகோதரனுக்கு தீமை பயக்கும் எதையும் செய்யாதபடி தீர்மானம் செய்வோமாக, நமது சுயாதீனம் நியாயமானதாக இருந்தாலும், நமது சகோதரனுக்கு தீமைக்கு ஏதுவாக இருக்குமானால் அதை அப்பியாசப்படுத்தமாட்டோம் என தீர்மானிப்போமாக, அவனது நன்மைக்காக அதை அர்ப்பணிப்போம்; அதை தியாகம் செய்வோம். நமது ஜீவனை அவனுக்கு கொடுக்கிற அளவுக்கு தியாகம் செய்வோம்.

“இப்படி சகோதரருக்கு விரோதமாக பாவஞ்செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியை புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் பாவஞ் செய்கிறீர்கள். ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்.” (1கொரிந்தியர் 8:13)

R4920

## LORD’S GOAT AND SCAPE - GOAT
## கர்த்தரின் ஆடும் போக்காடும்

இஸ்ரயேலரின் “பாவ நிவாரண நாள்” இந்த சுவிசேஷ யுகத்தையும் ஆயிரம் வருட யுகத்தில் வரும் ஆசீர்வாதங்களையும் நிழலாக காண்பிக்கிறது என்பதை “விசேஷித்த பலிகளின் ஆசாரிப்புக் கூடார நிழல்கள்” புத்தகத்தில் நாம் முன்னரே காண்பித்திருக்கிறோம். இப்பொழுது, இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து அவரது மகிமையின் இரண்டாம் வருகை வரை பலியின் காலமாக இருக்கிறது. அதன் பிறகு, புது உடன்படிக்கையின் கீழாக, மெய்யான “விசேஷித்த பலிகளின்” புண்ணியம் மனுக்குலத்திற்கு பொதுவான பயன்பாட்டிற்கான காலம் வரும். உண்மையுள்ள பலி கொடுப்பவர் (தலையும் சரீரமும்) தேவனுக்கும் பொதுவாக மனக்குலத்திற்கும் மாபெரும் மெய்யான மத்தியஸ்தராக இருப்பார் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

இந்த யுகத்தின் அழைப்பு பலிகளுக்கு மட்டும் தன்னைத்தான் வெறுக்கிற நமது இரட்சகரின் அடிச்சுவட்டில்

மரணம் வரை பின்பற்றுவதற்காக மட்டுமே. இதுவே கர்த்தரின் திட்டமாக இருந்தது. "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்." (மத்தேயு 10:39) பரிசுத்த பவுல் இதை மீண்டும் வலியுறுத்தி விளக்குகிறார். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்." ஏனெனில் "அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்." (ரோமர் 12:1; 2 தீமோத்தேயு 2:12)

### அப்போஸ்தலர் நிழலையும் உண்மைப் பொருளையும் மிகவும் அழகாக காண்பிக்கிறார்

பரிசுத்த பவுல் சபையின் பாடுகளையும் இரட்சகரின் பாடுகளையும் நேரடியாக இணைத்து இரண்டையும் பாவ நிவாரண நாளின் "விசேஷித்த பலிகளுடன்" இணைக்கிறார். அவர் நிழலை குறிப்பிட்டு கூறுகிறதாவது: "நாம் அவருடைய நிந்தையை சுமந்து, பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டு போகக்கடவோம்." (எபிரேயர் 13:11-15) இங்கே அப்போஸ்தலர் நமது கர்த்தராகிய இயேசு "காளையின்" மெய்ப் பொருளை நிறைவேற்றினால் நாம் பாவ நிவாரண நாளின் "கர்த்தரின் ஆட்டின்" மெய்ப்பொருளை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார். காளை கொல்லப்பட்டது போல, நமது கர்த்தர் அந்த அம்சத்தை அவரது ஞானஸ்நானத்தில் மரண பரியந்தமான அர்ப்பணத்தில் நிறைவேற்றினர். "காளையின்" சரீரம் (கொழுப்பு மற்றும் இரத்தத்தை தவிர) பாளையத்திற்கு புறம்பே எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டது போல உண்மைப் பொருளை நிறைவேற்ற நமது கர்த்தர் அவமானத்தையும் நிந்தையையும் மாம்சத்தின் அழிவையும் அனுபவித்தார்.

அதே போல இந்த யுகத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற நாம் ("பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்") "கர்த்தரின் ஆட்டின்" உண்மைப் பொருளை நாம் நிறைவேற்ற வேண்டும். "காளையின்" அதே அனுபவங்களை "கர்த்தரின் ஆடும்" கடந்து சென்றது போல, நாமும் நமது கர்த்தரைப் போல, முதலாவது பலியின் உடன்படிக்கையை செய்து, அவமானம், நிந்தை மற்றும் தூஷணங்களை மரணம் பரியந்தம் அனுபவித்து கர்த்தரின் ஆட்டின் மாம்சத்தை எரித்தலை நிறைவேற்ற வேண்டும். இப்படியாக இரட்சகருடன் நீதியினிமித்தம் பாடுபடுகிறவர்கள் அவருடன் ஆயிரம் வருட யுகத்தில் ராஜரீக ஆசாரியர்களாக ஆளுகை செய்வார்கள்.

### போக்காட்டு வகுப்பார் "அவரது நிந்தையை" சுமக்கவில்லை

அர்ப்பணம் செய்து, ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் மரணம் வரை "இயேசுவின் நிந்தையை சுமந்து பாளயத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டு போக" மறுக்கிற அல்லது அசட்டை பண்ணுகிற ஒரு வகுப்பாரை இந்த "போக்காடு" காண்பிக்கிறது. இந்த வகுப்பார் இரட்சகரையோ "அவர்களை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தையோ" நிராகரிக்கவில்லை. இந்த "போக்காடு" ஆசாரிப்புக் கூடாரத்தின் கதவில் கட்டப்பட்டிருந்தது போல அவர்கள் மெய்ப்பொருளில் அவர்களது அர்ப்பணத்திற்கு வெளியரங்கமான விசுவாசமாக இருந்தது. ஆனால் "ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்துக்கு உள்ளானார்கள்" என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறது போல கட்டப்பட்டிருக்கிறார்கள்.

எனினும் கர்த்தர் இவர்களை "விடுதலை" பண்ணுவார். ஆனால் கனம், மகிமை மற்றும் சாகாமைக்கு அல்ல. இது "கர்த்தரின் ஆட்டின்" மெய்பொருள் வகுப்பாருக்கு வழங்கப்படும். அவர்களது "விடுதலை" என்பது துன்பங்களை அர்த்தப்படுத்துகிறது. துக்கம், ஏமாற்றம், பிரிவு என்கிற வனாந்திர நிலைமைக்கு அவர்கள் பலவந்தமாக அனுப்பப்பட்டு அவர்களது விசுவாசம் சோதிக்கப்படும். கர்த்தரின் ஆடு வகுப்பார் மரணத்திற்கு போவதால் அவர்கள் அனுபவிக்கிற துன்பங்கள் அளவுக்கு போக்காடு வகுப்பாரும் அனுபவிக்கலாம். இதில் வித்தியாசம் என்னவென்றால் கர்த்தரின் ஆடு வகுப்பார் மனமுவந்து, சந்தோஷத்துடன் தாங்களாகவே பொறுமையுடன் சகிப்பார்கள். ஆனால் மற்ற வகுப்பார் சூழ்நிலையின் சந்தர்ப்பத்தினால் சகிக்க வேண்டும். இவற்றை சகிக்க தவறினால் இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள் எந்த ஆடு வகுப்பார் மூலமும் குறிப்பிடப்படுவதில்லை.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இரண்டு வித்தியாசமான வகுப்பாராக குறிப்பிடப்படுவதாக சிலர் தவறாக நினைக்கிறார்கள். இப்படி அல்ல. அவர்கள் முடிவடைந்த வகுப்பாரையே குறிப்பிடுகிறார்கள். "மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்கள்" (எபிரேயர் 6:4-8; 10:26,27) முற்றிலுமாக புறக்கணிக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் முற்றிலுமாக தோல்வியடைந்து இரண்டாம் மரணத்திற்கு செல்வார்கள்.

### பந்தயத்தின் முடிவு நமது நிலைமையை முழுமையாக வெளிப்படுத்தும்

முடிவு வரும் வரை அர்ப்பணம் செய்தவர்களில் யார் பலியை நிறைவேற்றுவார்கள், யார் பந்தயத்திலிருந்து விலகிவிடுவார்கள் என்பது தெரியாது. "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டீர்கள்." அந்த நம்பிக்கை நாம் "கர்த்தரின் ஆடு" வகுப்பாராக இருப்போம் என்பதே. சிலர் கொஞ்ச காலம் கர்த்தரின் ஆட்டின் பங்கை நிறைவேற்றுபவர்களாக காணப்பட்டு, பின்னர் "மனதளவில் சோர்ந்து மற்றும் தளர்ந்து" போய் போக்காட்டின் அனுபவங்களை பெற்று அதை மாதிரிப்படுத்துவார்கள். முடிவில் அவர்கள் பெருமையை அனுமதித்து அல்லது வேறு மாதிரியான சுயநலத்தை அனுமதித்து அவர்கள் முத்திரையிடப்பட்ட பரிசுத்த ஆவியை அழித்துப் போடலாம். அதன் மூலம் அவர்கள் தேவனுடைய கிருபையிலிருந்து நீக்கப்பட்டு எதிரிகளாக கருதப்பட்டு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படலாம்.

மறுபுறம் அநேகர் அபிவிருத்தியில மந்தமாகவும், நீதியினிமித்தமும் சத்தியத்தினிமித்தமும் மந்தமாகவும் இருந்து கர்த்தருடைய ஆவியில் மந்தமாகவும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனிமித்தம் அவர்கள்

வருடக்கணக்காக "போக்காடு" வகுப்பாராக காணப்படுகிறார்கள். எனினும் பின்னர் வெளிப்படையான உயரிய சுய பலியின் மூலமாக மிகவும் தெளிவான சத்திய வெளிச்சத்தைப் பெற்று, கர்த்தரின் ஆடு வகுப்பாரின் அங்கங்களாக தங்கள் ஓட்டத்தை முடிப்பதாக காண்பிக்கிறார்கள்.

நமது சோதனைகள் அனைத்தும் முடியும் வரை நம்மைக் குறித்து எதையும் தீர்மானிக்க முடியாது. பரிசுத்த பவுல் அதிகமாக தியாகம் செய்த பிறகு, "கர்த்தரின் ஆடு" வகுப்பின் தற்காலிக அங்கமாக அநேக பாடுகளின் அனுபவங்களைப் பெற்ற பிறகு, கர்த்தரின் விசேஷித்த சாதனமாக கனப்படுத்தப்பட்ட பிறகு எழுதுகிறதாவது: "மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கி (புதிய சிந்தை மற்றும் பலியிடுவதற்காக அதன் அர்ப்பணத்திற்கு) கீழ்ப்படுத்துகிறேன்." (1கொரிந்தியர் 9:27)

சகோதரரே, விசுவாசிகளுக்கு, மணவாட்டி வகுப்பாருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையின் கிரீடம், கனம் மற்றும் சாகாமையை அடைந்தால் கர்த்தரின் ஆட்டின் அனுவங்களை கர்த்தர் நம்மில் நிறைவேற்றியிருப்பார். உண்மையிலேயே இரண்டாந்தர கன்னிகை வகுப்பார் அங்கு இருப்பார்கள். அவர்கள் தங்களது அற்பமான அனைத்தையும் பலிகொடுக்காமல் வைத்துக் கொள்ளுவார்கள். அதன் பலனால் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி அங்கமாவதில் தோல்வியடைவார்கள். இவர்கள் தாழ்ந்த விசுவாசத்தை வெளிப்படுத்தி, மணவாட்டி வகுப்பாரை அவளது கனமுள்ள ஊழியர்களாக பின்பற்றுவார்கள். (சங்கீதம் 45:14) இவர்கள் போக்காடு வகுப்பாராக குறிப்பிடப்படுகிறார்கள்.

எந்த ஒரு வாசகரும் வைராக்கியத்துடனும் மனமுவந்து தனது இரட்சகருடன் பாடுபடாமலும், தனது சக்தி, நற்பெயர் மற்றும் ஜீவனை அவரது ஊழியத்திற்கு கொடுக்காமலும் இருந்தால், தான் போக்காடு வகுப்பில் ஒருவராக கருதப்படவோ அல்லது இன்னும் மோசமாகவோ கருதப்படக்கூடிய ஆபத்து இருப்பதை அவர் உணருகிறார். அப்படிப்பட்டவர்கள் சீக்கிரத்தில் எழும்பி ஆண்டவரின் பலியின் அடிச்சுவட்டில் நடக்க அவரது கிருபை மற்றும் விசுவாசத்திற்காக ஜெபிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் "மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" தியானித்த கர்த்தரின் அதே சிந்தையை நாட வேண்டும். உடனே அவன் "பாரமான யாவற்றையும் அவனைச் சுற்றி நெருங்கி நின்ற பாவத்தையும் தள்ளிவிட்டு, அவனுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் இடுக்கமான வழியில் ஓட வேண்டும்." அவன் உண்மையில் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்க வேண்டும். அவன் சிந்தையில் இளைப்புள்ளவனாய் சோர்ந்து போகாதபடிக்கும் ஜெயங்கொள்ளுவதில் தோல்விடையாதபடிக்கும் அவரை நோக்க வேண்டும்.

R4921

# NOBILITY CONQUERS MEANNESS

# பெருந்தன்மை அற்பத்தனத்தை மேற்கொள்ளுகிறது

நெகேமியா 6

"கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்." சங்கீதம் 27:1

அநேக கஷ்டங்களுக்கு பிறகு, நெகேமியாவின் வேலை ஏறக்குறைய வெற்றியை எட்டியது. அப்பொழுது துயரத்தின் ஓலம் சென்றது, ஏழை யூதர்கள் தங்கள் நேரம் முழுவதையும் அலங்கம் கட்டுவதற்கு கொடுத்தார்கள். அதன் மூலம் அவர்களுக்கு வருமானம் நின்று போனது. அதனிமித்தம் தங்களது சொத்துக்களை அடமானம் வைத்தார்கள். வரி வசூலிப்பவர்கள் வந்தபோது வட்டி கட்டமுடியாத நிலை ஏற்பட்டது. ஒரு தீவிர வறுமை அவர்கள் முகத்தில் தெரிந்தது. ஒரு பெரிய துயரத்தின் ஓலம் சென்றது. பெருந்துயர் வேகமாக பரவியது. உணவுக்கான கலவரங்கள் தவிர்க்க முடியாததானது.

நெகேமியா காரியத்தை கவனித்தார்; வசதியுள்ள யூதர்கள் தங்களது ஏழை அண்டை வீட்டாரிடம் அளவுக்கு அதிகமான வட்டிக்கு அடமானம் வாங்கினதைக் கண்டார். இப்படியாக அவர்கள் அந்த பெருந்துயரில் லாபமடைந்தனர். நெகேமியா அவர்கள் அனைவரையும் சேர்த்து அழைத்து அவர்களிடம் கனிவாகி பேசி, நியாயப்பிரமாணத்தில் சகோதர கடமைகளை குறித்து சொல்லப்பட்டவைகளை கூறினார். "தன்னைத்தான் நேசிக்கிறது போல பிறரை நேசிப்பாயாக." அவர் நடைமுறை உதாரணங்களுடன் நல்ல அறிவுரையைக் கொடுத்தார். வசதியான யூதர்கள் வெட்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் அநீதியை உணர்ந்து காரியங்களை சரி பண்ணினார்கள். இங்கே நாம் உயர்ந்த குணத்தின் வல்லமையையும் மற்றவர்கள் மேல் நல்ல உதாரணத்தின் தாக்கத்தையும் நாம் காண்கிறோம். வழக்கம் மற்றும் உதாரணம் மற்றவர்கள் மேல் அநீதியான முறைகளுக்கு ஆதரவு காட்டுகிறது. பயன்பாடு அநேகரது மனங்களை சரியாக்குகிறது. அதே போல் நீதியின் உதாரணங்கள் தீமையை எதிர்ப்பதில் வல்லமையுள்ளதாய் இருக்கின்றன. இப்படியாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கும் தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்கும் கடன்பட்டுள்ளான். சரியான நிலையை எடுப்பதில் மாத்திரமல்ல, இந்த நிலை நீதிக்காகவும், அநீதியை கண்டிப்பதற்காகவும் என்பது மற்றவர்களுக்கும் தெரிந்திருப்பதாக.

### துரோகமும் அவதூறும் எதிரானது

ஒரு புது எதிரி எழும்புவதற்கு முன்னர் பரவலாக இருந்த கஷ்டங்கள் சீக்கிரத்தில் வெற்றிகரமாக எதிர்த்து போராடப்படவில்லை. வெளியிலுள்ள எதிரிகள், அலங்கமானது முடிவடையும் தருவாயில் இருப்பதையும் எருசலேமின் பாதுகாப்புக்கு வயிற்கதவு மட்டுமே மீதியாயிருக்கிறது என்பதையும் உணர்ந்து வேறு புதிய தந்திரங்களை முயற்சித்தார்கள். முழு காரியத்தையும் மறுபரிசீலனை செய்வதற்கு வெளியரங்கமாக

விரும்பினார்கள். அதாவது நெகேமியாவை சந்தித்து அவர்களது வேலையைப் பற்றி விவாதிக்கவும் ராஜாவின் உத்திரவு குறித்த ஆவணங்களை பரிசோதிக்கவும் விரும்பினார்கள். சகோதரர்களோடு விவாதிக்க அவருக்கு நேரம் இருந்தது. தேவனுடைய ஜனங்களாக அவர்களை காண்பிக்கவும், முக்கியமான கேள்விகளுக்கு சரி மற்றும் தவறு என்பதைக் கூறவும் நேரம் இருந்தது. இந்த முக்கிய வேலை முடிக்கப்படாமல் இருந்த போது வெளி விவகாரங்களை விவாதிக்க நேரம் இல்லை.

இதில் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பாடம் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையையும் அவரது அன்பையும் குறித்து சகோதரர்களிடம் விவாதிக்க எப்பொழுதும் நமக்கு நேரம் இருக்க வேண்டும். நம்மில் இருக்கிற நம்பிக்கைக்கான காரணத்தை யாருக்கும் சொல்ல நாம் நேரத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தேவனைக் குறித்த ஆர்வமான காரியங்களுக்கு நமக்கு நேரம் தேவைப்படும் போது வெளி விவகார கேள்விகளை விவாதிக்க நமக்கு நேரம் இல்லை. இதை பரிசுத்த பவுல், "ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கை" என்று பெயரிடுகிறார். பரிசுத்த பவுல், "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறுகிற அவரது சிந்தையே நமக்கும் இருக்க வேண்டும். இயேசுவை தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்ட குமாரன் மேசியாவைப் பற்றியோ, அவரது சிலுவையில் அறையப்படுதல் குறித்தோ அல்லது அதன் மூலம் வளர்க்கப்பட்ட நம்பிக்கைகள் குறித்தோ விவாதிக்க பரிசுத்த பவுல் எப்பொழுதும் தயாராயிருந்தார். இதைக் குறித்து பேசுவதே அவரது வாழ்க்கையின் முக்கிய வேலையாக இருந்தது. அவர் கற்றுத் தேர்ந்தவராகவும் பொதுவான காரியங்களில் அதிக ஞானமுள்ளவராக இருந்தாலும், அதைப் பற்றி ஒன்றும் அறியாதவர் போல் இருந்து, மிகவும் முக்கிய காரியத்திற்கு அவர் சேனாதிபதியாக இருக்கக்கூடிய காரியத்திற்கு நேரத்தையும் செல்வாக்கையும் கொடுக்கக் கூடியவராக இருந்தார்.

நெகேமியாவுடன் பேச நான்கு தடவை வெளியாட்கள் முயற்சித்தார்கள்; நான்கு தடவையும் அவர் மறுத்தார். அவர் செய்து வந்த வேலையின் முக்கியத்துவத்தினால் மாத்திரமல்ல, எருசலேமிலிருந்து இருபது மைல் தூரத்தில் இருந்த ஒரு கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த மாநாட்டிற்கு சென்றால், நெகேமியா இல்லாத சமயத்தில் இஸ்ரயேலின் படைப்பிரிவை மேற்கொண்டு முடிந்திருக்கிற வேலையை அழிக்க அல்லது அந்த மாநாட்டில் அவரிடம் வன்முறை செய்யவோ அல்லது இரண்டையும் செய்யவோ திட்டமிட்டிருக்கலாம் என்று உணர்ந்தார்.

## தூஷணமும் அவதூறும்

முடிவாக எதிராளிகள் வழக்கமான ஆயுதங்களாகிய அவதூறு பேசுவதை பயன்படுத்தினார்கள். நெகேமியா எருசலேமை தலைநகரமாகக் கொண்டு யூதர்களுக்கு ராஜாவாக விரும்புகிறார் என்பதை நேரடியாகக் கூறவில்லை. மேலும் அவர் ஆட்களை ரகசியமாக ஏற்படுத்தி ஜனங்களிடையே அவருக்கு ஆதரவாக பேசும்படி ஏற்பாடு செய்கிறார் என்று வதந்திகளை பரப்பச் செய்தார்கள். அவைகள் "பொதுவான வதந்திகளாக" இருந்தன. நெகேமியாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார்கள். அதில் "நீரும் யூதரும் கலகம் பண்ண நினைக்கிறீர்கள் என்றும், அதற்காக அலங்கத்தை கட்டுகிறீர் என்றும் இவ்விதமாக நீரும் அவர்களுக்கு ராஜாவாகப் போகிறீர் என்றும் கோசேம் சொல்கிறான்" என்று எழுதியிருந்தது.

இந்த செய்தியை சன்பல்லாத் பாராட்டு தெரிவிக்கிற மாதிரியும் ஒரு நண்பனாக இருந்தது போலவும், ராஜாவின் தொந்தரவிலிருந்து நெகேமியாவை காப்பாற்றும் நம்பிக்கையுடனும் அனுப்பியிருந்தான். இன்னும் அவன் அவரது நன்மைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வரச் சொல்லி வற்புறுத்தியிருந்தான். அதற்கு நெகேமியாவின் பதிலாவது: "நீர் சொல்லுகிற அந்த காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை. அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறெல்ல." இந்த காரியம் யூதர்களை எச்சரிக்கைப் பண்ணவும் மற்றும் அவர்களது வேலை முடிவடைவதை கெடுக்கவுமேயாகும்.

அவதூறின் பலதரப்பட்ட முறைமைகள் எவ்வளவு கொடூரமாக இருக்கின்றன! சரியானது எல்லாவற்றிற்கும் எப்படி மாறுபாடாக இருக்கின்றன! அனைத்து தரநிலைக்கும் மேலான கிறிஸ்தவ அன்பு சொல்லப்படவில்லை! தேவனுடைய ஜனங்கள் எவ்வாறு அடிக்கடி அவதூறின் ஆவியால் சிக்க வைக்கப்படுகிறார்கள். இவ்விதமாக நிறைவேற்றப்படுகிற தவறுகள் எவ்வளவு துக்ககரமாக இருக்கின்றன; அநீதியாக ஏற்படுத்தப்பட்டவை எப்படி தாங்க முடியாததாக இருக்கிறது; ஏற்பட்ட பொறுப்புகள் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கின்றன! தங்கள் உதடுகளை அவதூறுக்கு பயன்படுத்துகிறவர்கள் சத்துருவானவனுக்கு தங்கள் இருதயங்களை திறக்கிறார்கள். தூஷணம் வேத வாக்கியங்களால் மாத்திரமல்ல, உயர்ந்த மனிதர்கள், ஸ்திரீகள் மற்றும் புற ஜாதிகளாலும் கண்டிக்கப்படுகிறது. நெகேமியாவின் உயிர் அச்சுறுத்தப்பட்ட போதிலும் தேவனிடத்தில் இருந்த அவரது விசுவாசமும் தெய்வீக வழி நடத்துதலும் அவரை பயமில்லாமல் இருக்கச் செய்தது. "மூன்று பொன் வாயில்கள்" என்ற பாட்டுடன் இதை முடிக்கிறோம்.

"யாரோ ஒருவர் மற்றவரைப் பற்றி,
உனக்கு சொன்ன கதையை வெளிப்படுத்த
நீ தூண்டப்பட்டால், அது கடந்து போவதாக,
நீ பேசுவதற்கு முன்னே, மூன்று பொன் வாயில்கள் —

"மூன்று இடுக்கமான வாசல் – முதலாவது, 'அது உண்மையா?'
பிறகு 'அது தேவையா?' உன் மனதில்
உண்மையான பதிலைக் கொடு, அடுத்ததாக
'அது கனிவானதா?' கடைசியானது – குறுகியது.

"அது உன் உதட்டை அடைந்தால் கடைசியாக
இந்த மூன்று வாசல் வழியே கடக்கிறது.
பிறகு நீ கதையை சொல்லு, பயப்படாதே
பேசினதின் விளைவு எதுவாக இருந்தாலும்."

R4922

# EZRA'S BIBLE CLASS
# எஸ்றாவின் வேதாகம வகுப்பு

நெகேமியா 8

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது." சங்கீதம் 19:7

எஸ்றா, நியாயப்பிரமாணத்தின் ஆராய்ச்சியை தொடரவும் அவைகளை தொகுக்கவும் பாபிலோனுக்கு திரும்பினார். பதிமூன்று வருடங்களுக்கு பிறகு அவரைப் பற்றி கேள்விப்படுகிறோம். மறுபடியும் அவர் குறிப்பிடபட்டவர்களுடன் எருசலேமிற்கு சென்றார். நெகேமியாவின் வேலையாகிய நகரத்தின் அலங்கம் மற்றும் வாசல்களை கட்டுதல் யூத புது வருடத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே முடிவடைந்தது. அந்த வாரம் ஓய்வு மற்றும் புத்துணர்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டது. அந்த நாளில் (அக்டோபர் முதல் தேதி) ஒரு பொதுக்கூட்டம் தேவலாயத்துக்கு பின்னாடி ஒரு திறந்த வெளி சதுக்கத்தில் நடந்தது. அங்கே ஒரு பிரசங்க மேடை எஸ்றாவுக்காக அமைக்கப்பட்டது. அவர் வேத பாரகனாகவும் கற்றறிந்தவருமாயிருந்தார். அவர் காலையிலிருந்து மதியம் வரை நியாயப்பிரமாண புத்தகத்தை ஜனங்களுக்காக வாசித்தார். அது பாகம் பாகமாக வாசிக்கப்பட்டது. ஆசாரியர்களும் லேவியர்களும் ஜனங்களுடன் கலந்து அதன் விளக்கங்களையெல்லாம் தெரிவித்தார்கள். ஜனங்கள் மரியாதையினிமித்தம் பிரமாணம் வாசிக்கப்படும் போது நின்று கொண்டிருந்தார்கள். அதன்பிறகு அதைக் குறித்து விவாதிக்கும் போது அவர்கள் தரையில் உட்கார்ந்தார்கள்.

அது ஒரு பெரிய வேதாகம வகுப்பாக இருந்து. ஆழமான ஆவலை துண்டியது. தெய்வீக பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்ட பொழுது, தாங்கள் பிரமாணத்தை, தங்களால் முடிந்த அளவுக்குக் கூட கைக்கொள்ளவில்லை என்பதை உணர்ந்தார்கள். அவர்கள் மேல் பல்வேறு தண்டனைகளும், சிறையிருப்பு முதலானவை வந்ததற்கான காரணத்தை உணர்ந்து கொண்டார்கள். அப்படிப்பட்ட பிரமாணம் தேவன் அவர்களுடன் செய்திருந்த உடன்படிக்கை என்பதை உணர்ந்தார்கள்; அவர்கள் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும் செழுமையும் கிடைக்கும். கீழ்ப்படியவில்லை என்றால் தண்டனையும் சிறையிருப்பு முதலானவைகள் கிடைக்கும். பாவத்தை உணர்ந்ததால் வருத்தத்தையும் கண்ணீரையும் வருவித்தது. ஜனங்கள் கடுந்துயரத்துடன் அழுதார்கள்.

பிறகு நெகேமியா, எஸ்றா மற்றும் மற்றவர்களும் ஜனங்களிடம் நேரடியாகவும் லேவியர் மூலமாகவும் விளக்கினார்கள். அது அழுவதற்கான நேரமல்ல, மாறாக சந்தோஷப்படுவதற்காக நேரம் என்று கூறினார்கள். அவர்களது பிதாக்கள் செய்த தவறுகளுக்காக தேவன் கொடுத்த தண்டனையின் தீவிரத்தை நினைப்பது மாத்திரமல்ல, அவர்களுக்கு திரும்ப கிடைத்த அவரது இரக்கங்களையும் நினைக்க வேண்டும்; மேலும் விசேஷமாக மறுபடியும் அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தை அனுப்பி, அதன் மூலம் அவருடைய கிருபைக்கு அவர்களை திரும்ப ஏற்றுக்கொள்ளும் அவரது சித்தத்தை குறிப்பிட்டார் என்பதை நினைக்க வேண்டும். முன்னுரைக்கப்பட்ட தண்டனையையும் தேவனுடைய இரக்கத்தையும் அவர்கள் நினைவு கூர்ந்தார்கள். அவர்கள் வருந்தி மனம் மாறும்போது, அவர் அவர்களை மன்னித்து அவர்களை அவரது கிருபைக்கு ஏற்றுக்கொள்வார் என்பதையும் நினைவுகூர்ந்தார்கள். இப்படியாக அவர்களுடைய கண்ணீர்கள் புன்னகையாகவும் அவர்களது துக்கம் சந்தோஷமாகவும் மாறியது,

நெகேமியாவின் செய்தி: "நீங்கள் போய் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்கு பரிசுத்தமான நாள், விசாரப்பட வேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்."

### அவர்கள் நியாயப்பிரமாணத்தை தீர்க்கமாக வாசித்தார்கள்

அறிவிப்பு என்னவென்றால் அவர்கள் "ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளங்கப் பண்ணினார்கள்" என்பதாகும். இன்றைக்கு இப்படிப்பட்ட புத்திமதி மிகவும் வெளியரங்கமாக தேவைப்படுகிறது. தேவனுடைய வார்த்தையை சரியாக புரிந்துகொள்ளாததால் பேர் கிறிஸ்தவர்கள் பாழான நிலைமையில் இருக்கிறார்கள். "தேசத்தின் மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவானால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம் வரும்" என்று தீர்க்கதரிசி குறிப்பிடுகிற காலமாக இது இருக்கிறது. (ஆமோஸ் 8:11)

அநேகர், தாங்கள் வேத போதனைகளில் பழக்கப்பட்டவர்கள் என்று கற்பனை செய்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே இருண்ட காலத்தின் விசுவாச அறிக்கைகளில் பழக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதில் சத்தியத்தோடு தப்பறைகளும் கலந்திருக்கின்றன என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். நமது விசுவாசமும், விசுவாச அறிக்கைகளும் முழுவதும் வலுவாகவும் வேதாகம போதனைகளை குறித்துக் காட்டுகிறது என்றும் கருதுவது நமது பெரிய தவறு. இந்த தவறு முன்னரே அதிக அளவில் இருந்திருக்கிறது. விசுவாச அறிக்கைகள் சரியானபடி வேத போதனைகளை குறிப்பிடுகிறது என்று தவறாக கருதி உயர் பண்புள்ள அநேகர் வேதாகம போதனையை விட்டு விலகிச் சென்றிருக்கிறார்கள். இனி அவர்கள் எந்த கிறிஸ்தவ விசுவாச அறிக்கையையும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி. இந்த பிரகாசமான

மனங்கள் அவைகளையும் வேதாகமத்தையும் கூட கைவிட்டு விட்டன.

வேதாகம ஆராய்ச்சியை விசுவாச அறிக்கை என்கிற கண்ணாடி இல்லாமல் மீண்டும் தொடர்வதே தேவையான காரியமாக இருக்கிறது. நம் முன்னோர்கள், நமது விசுவாச அறிக்கைகளை ஒருவரையொருவர் துன்புறுத்துவதில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு அவற்றை முற்றிலுமாக கண்டனம் செய்கிறோம். அவர்கள் சந்தேகமில்லாமல் நம்மைப் போல நேர்மையானவர்கள். ஆனால் அவர்கள் குறைவான சத்திய வெளிச்சத்தை பெற்றிருந்தனர். அவர்கள் ஒரு இருளான யுகத்தில் வாழ்ந்தார்கள். தேவன், அவரது சிருஷ்டிகளில் கோடிக்கணக்கானவர்களை சித்திரவதை செய்து கொண்டிருக்கிறார் என்கிற நம்பிக்கையினால் நல்லெண்ணம் கொண்ட நமது முன்னோர்கள் தேவனுடைய பெயரால் ஒருவருக்கொருவர் சித்திரவதை செய்தனர். அதை நாம் இப்பொழுது நீதியானது அல்லது அன்பானது அல்லது கிறிஸ்துவை போன்றவர்கள் என்றோ நாம் ஆதரிக்கமுடியாது.

பிறகு ஏன் இந்த விசுவாச அறிக்கைகளை எல்லா விதங்களிலும் சரியானது என்று கருத வேண்டும்? அப்படியிருந்தால் சகோதரர் கேல்வினைப் போன்ற நல்ல மனிதன், எப்படி செர்வடஸ் என்ற ஒரு கிறிஸ்தவ சகோதரரை கழுமரத்தில் ஏற்ற ஆணைப் பத்திரத்தில் கையெழுத்திட்டார்? இது கேல்வினின் வேதாகம கொள்கைகளில் தவறு இருப்பதை நிரூபிக்கிறது. இது எல்லா புரட்டஸ்டன்ட் விசுவாச அறிக்கைகளிலும் இருக்கிறது.

இன்றைக்கு நாம் வைத்திருக்கும் வேதாகமங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவ வீடுகளிலும் காணப்படுகிறது. நமது முன்னோர்கள் அறிந்திருந்ததை காட்டிலும் அதிகமான வேதாகம சத்தியங்களை நாம் அறிந்திருக்க வேண்டும். இந்த விஷயத்தில் கல்வி அதிகமாக உதவுவது மாத்திரமல்ல, நமது வேதாகமங்கள் மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒத்த வசனங்கள், குறிப்புகள் முதலான ஆராய்ச்சிக்கான உதவிகளை நாம் பெற்றிருக்கிறோம். நாம் லேவியர்கள் மற்றும் இஸ்ரயேலர்களைப் போல வேதாகமத்தை புதிதாக படித்து அதன் போதனைகளை ஜனங்களுக்கு போதிக்க வேண்டிய நேரமில்லையா இது?

ஒரு நாளைக்கு இத்தனை அதிகாரங்கள் படிக்க வேண்டும் என்றோ அல்லது வசனங்களை மனப்பாட பண்ண வேண்டும் என்றோ அல்லது ஞாயிறு பள்ளி பாடங்களை மனப்பாடம் பண்ண வேண்டும் என்றோ நாங்கள் வாதிடவில்லை. வேதாகமத்தின் அடிப்படையில் மட்டுமே நமது விசுவாசத்தை மறுபடியும் கட்ட வேண்டும் என்று வாதிக்கிறோம். அனைத்து தேவனுடைய பிள்ளைகளும் அவர்களது மனதிலிருந்து அவர்களது விசுவாசக் கொள்கை என்ற கண்ணாடியை நீக்கிப்போட்டு வேதாகமத்தை அதன் வெளிச்சத்தில் புதிதாக படித்தால் ஒரு பெரிய ஆசீர்வாதம் வேகமாக பின் தொடரும். விரைவில் வேத மாணவர்கள் ஒருவருக்கொருவரும் பிதாவுடனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடனும் ஒன்றாகி வேதாகம வாக்கியங்களில் குறிப்பிட்டபடி ஜீவனுள்ள தேவனுடைய ஒரே சபையாக, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவனும் பிதாவும் என்று இருப்பார்கள்.

### தெய்வீக பிரமாணத்தின் வல்லமை

வேறெங்கும் காணமுடியாத நன்மைக்கான சக்தி தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது. உலகில் சட்ட ஒழுங்கின்மை வளர்வதற்கு உயர் விமர்சனம் அதிக பொறுப்புடையதாக இருக்கிறது. "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது." அதாவது ஜீவனை மறுரூபமாக்குகிறது. நமது கல்லூரிகள் மற்றும் மத கல்வி நிலையங்களின் உயர் விமர்சனங்கள் வால்ட்டேர், தாமஸ் பெயினே மற்றும் ராபர்ட் இங்கர்சால் போன்றவர்களைக் காட்டிலும் பயங்கரமான அழிவு வேலைகளை செய்துக் கொண்டிருக்கின்றன. கல்லூரிகளில் உள்ள மாணவர்களில் நான்கில் மூன்று பங்கினர் கடந்த முப்பது வருடங்களில் வேதாகமத்தை விசுவாசிக்காதவர்களாக ஆகியுள்ளனர். அவர்கள் மற்றவர்களின் விசுவாசத்தை பலவீனப்படுத்தவே தங்களது செல்வாக்கை விடாமுயற்சியுடன் பயன்படுத்துகின்றனர். நம்பிக்கையின்மைக்கு வழிநடத்துகிற தப்பறைகள் மற்றவர்களின்மேலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வேதாகமமே ஒரு படிப்பாக இருக்கிறது. அது போதிப்பதை நம்ப வேண்டும். நம்முடைய முந்தைய விசுவாச கோட்பாடுகளுக்கு இசைவாக இருந்தாலும், மாறுபாடாக இருந்தாலும் வேதாகமம் போதிப்பதை விசுவாசிக்க வேண்டும்.

R4925

## "THE FEET OF HIM"

## "அவருடைய பாதங்கள்"

தேவனுடைய சபை பாதகமான தாக்கங்களுக்கு கீழாக இருக்க வேண்டும் என்பது அதன் ஒழுங்கு, சோதனை மற்றும் கடைசியான ரூபகாரத்துக்கும் அவசியமாய் இருக்கிறது. ஏனெனில், "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு" பெரிய பரிசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. நாம் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்ய வேண்டுமானால், தேவனிடத்தில் விசுவாசம், அவருடைய வசனத்தில் விசுவாசம், சத்தியத்துக்கான வைராக்கியம், பொறுமையோடு சகித்தல், நிந்தைகள் மற்றும் துன்பங்கள் ஆகிய மரணபரியந்தமான அதே சோதனை மூலம் ஆளுகை செய்வதற்கான தகுதியை நிரூபிக்க வேண்டும். ஏற்ற காலத்தில் தேவனுடைய சபையை விடுவித்து, உயர்த்தும். அவரது நோக்கம் மற்றும் வல்லமை மேல் உறுதியான நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு சங்கீதம் 91 ஆசீர்வாதமாக ஆறுதலாக இருக்கிறது. அதை சுவிசேஷ யுக முடிவில் சபையின் சித்திரமாக நாம் நம்புகிறோம். கவனித்துக்கேள்:

“உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் (ஆசாரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம் நிழலாக காண்பிக்கிறது) சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்.” நம்மை தேவன் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளும் அவரது சித்தத்தை அறிய வந்திருப்பதின் மூலம் நாம் தேவனுடைய பாதுகாப்பின் கீழ் அடைக்கலம் புகுகிறோம். நாம் நன்றியுடன் அழைப்பை ஏற்றுக்கொண்டு, நமது இரட்சகராகிய கிறிஸ்து மூலம் அவர் குறித்த வழியில் அணுகுகிறோம்; அவருடைய ஊழியத்திற்காக நம்மை முழுமையாக அர்ப்பணிக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய விலையேறப் பெற்ற வாக்குத்தத்தத்தில் இனிமையாக இளைப்பாறுவார்கள். அவைகளெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்கும் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. (2 கொரிந்தியர் 1:20) உலகமானது தெய்வீக பாதுகாப்பின் செட்டைகளின் நிழலை காணாது. ஆனால் விசுவாசிகள் மறைவான ஆசீர்வாதத்தின் உணர்வை பெறுவார்கள்.

“நான் (உண்மைப் பொருளில் கிறிஸ்து இயேசு) யேகோவாவை நோக்கி: நீர் என் அடைக்கலம்; என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்.” சாத்தானின் வஞ்சகத்திலிருந்து பாதுகாக்கப்படாதவர்கள் இடறுவார்கள். ஏனெனில் கர்த்தர் கூறியதாவது: அவர்கள் மிகவும் தந்திரமும் வஞ்சகமுடையவர்களாக இருந்து, கூடுமானால் “தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும்” வஞ்சிப்பார்கள். ஆனால் இது சாத்தியமில்லை. ஏனெனில் தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்பண்ணுகிறவர்கள் சர்வ வல்லவரின் பாதுகாப்பில் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள். ஆனால் மாம்சீக வியாதி மற்றும் கொள்ளை நோய்களிலிருந்து அல்ல, ஆனால் நீதி மற்றும் ஆவிக்குரிய கொள்ளை நோயின் அழிவிலிருந்தும் பழைய சுபாவத்தின் பாவமுள்ள இயற்கை குணத்திலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள். அது பாதுகாக்கப்படாத சமயங்களில் உன்னதமானவரின் மறைவின் கீழ் நிலைத்திராதவர்களின் ஆத்துமாக்கள் நசுக்கப்படும்; தப்பறையான போதகமாகிய ஆவிக்குரிய கொள்ளை நோய்களைக் கொண்டு நுட்பமான தர்க்க வாதத்தின் மூலம் விழித்திராதவர்களின் விசுவாசத்தை அழிக்கும்.

அப்படிப்பட்ட கொள்ளை நோய்கள் கிறிஸ்தவ விஞ்ஞானம், ஆவியுலகத் தொடர்பு என்று அழைக்கப்படுகிறவைகள் மற்றும் பல்வேறு மீட்கும் பொருள் இல்லை என்கிற கொள்கைகள் முன்னரே உலகத்தில் இருக்கின்றன. அது “பெரிய நம்பிக்கை” என்ற பெயரைக் கொண்டிருக்கிறது. அது தற்கால எதிர்பார்ப்புகள் மற்றும் தீர்க்கதரிசன பார்வையிலிருந்து விரைவில் தொற்று நோயாகும் என்று தெரிகிறது. இந்த சகல தொற்றுக்களிலிருந்தும் கர்த்தருடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் சர்வ வல்லவரின் நிழலில் பாதுகாப்பாக இருந்து காக்கப்படுவார்கள்.

“அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும் கேடகமுமாகும்.” யேகோவா தமது அன்பின் அனலை உணரும்படியாக விசுவாசமும் உண்மையும் உள்ளவர்களை தமது இருதயத்தின் அருகே கூட்டிச் சேர்க்கிறார். அவர்களது பதிலளிக்கும் இருதயத்தின் மொழியானது: “நான் உம்முடைய கூடாரத்தில் சதா காலமும் தங்குவேன்; உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன். நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பலத்த துருகமுமாயிருந்தீர், தேவனே, நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர்; உமது நாமத்துக்கு பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்.” (சங்கீதம் 61:4,3,5) ஆம், யுகங்களின் தெய்வீக திட்டத்தை உள்ளடக்கிய அவரது மாபெரும் சத்தியம், எளிமையான இருதயத்தில் அதை பெற்று அதற்கு விசுவாசத்தை நிரூபித்தவர்களுக்கு பரிசையும் கேடகமுமாயிருக்கிறது. விசுவாசிகள் அனைவரும் தரித்துக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிற தேவனுடைய ஆயுதமாக அது இருக்கிறது. அதை பகுத்துணர்ந்து, தியானித்து இருதயத்திலும் மனதிலும் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பயன்பாட்டின் மூலம் இந்த தீங்கு நாளில் தீமையையும் தப்பறையையும் எதிர்த்து நிற்கலாம்.

### யேகோவா தமது பரிசுத்தவான்களின் பாதங்களை காப்பார்

“இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும் இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.” தீர்க்கதரிசி ஏசாயாவும் நமது கர்த்தரும் குறிப்பிடுகிற இருளான இரவு இந்த “இரவு” தான். “விடியற்காலமும் வருகிறது, இராக்காலமும் வருகிறது.” “ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.” (ஏசாயா 21:12; யோவான் 9:4) ஆயிரம் வருட காலம் வருகிறது. அதற்கு முன்பாக மகா ஆபத்தின் நாள் நிச்சயமாக வரும். தெய்வீக சத்தியத்தை பரப்புகிற கிரியையை செய்யக்கூடாத இரவு அது. ஆகையால் “ஆபத்து” பயங்கரமாக இருக்கும். அந்த இரவில் கலவரம், துன்பங்கள் மற்றும் கஷ்டங்கள் இருக்கும். சத்தியத்தின் எதிராளிகளிடமிருந்து “கசப்பான வார்த்தைகளாகிய” அம்புகள் தற்காலத்தில் பகலில் பறக்கும். இந்த இரவைத் தொடர்ந்து வருவது காலை ஆகும். நம்பிக்கையின்மை, உயர் விமர்சனம் மற்றும் தப்பறையான போதனைகள் மூலம் வருகிற பல்வேறு இடையூறுகள் மற்றும் கஷ்டங்கள் எய்யப்படுகிற அம்புகளாகவும் கொள்ளை நோய்களாகவும் இடறுதலின் கற்களாகவும் உருவகமாக சொல்லப்படுகின்றன. இந்த சங்கீதத்தில் விசேஷமாக குறிப்பிடப்பட்டுள்ளபடி இவைகளில் ஏதும் “தெரிந்து கொள்ளப்பட்டவர்களை” காயப்படுத்தாது. “தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்” என்பது தலையாகிய கிறிஸ்துவும் அவரது அங்கங்களாகிய சபையும் சேர்ந்தது. சபையானது எதிர்ப்பு சக்தி உடையதாக இருக்கும். எந்த வகையிலும் எதுவும் அவர்களை காயப்படுத்தாது. கர்த்தர் கூறினது போல, இந்த நாளின் கஷ்டங்கள்

கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும், வஞ்சிக்கக்கூடும். ஆனால் இது நடக்காது. ஏனெனில் "பாத" வகுப்பார் பராமரிக்கப்படுவார்கள். இருளில் நடமாடுகிற நீதி மற்றும் ஆவிக்குரிய கொள்ளை நோய்க்கும் சபை பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அது சத்தியத்தை அறியாதவர்களிடையே அல்லது அதற்கு விசுவாசமாயிராதவர்களிடையே பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. ஆகையால் அவர்கள் அதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் தெய்வீக பாதுகாப்பில் குறைவுபட்டு, அவர்கள் தப்பறையை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்துக்கு உட்படுவார்கள். அது அநேகரது விசுவாசத்தையும் நம்பிக்கையும் கவிழ்த்து போடும். தெய்வீக சத்திய வெளிச்சம் இக்காலத்தில் நம்மேல் பிரகாசிப்பது போல, அப்பொழுது விசுவாசிகள் மேல் மிகவும் தெளிவாக பிரகாசிக்கும்.

"உன் பக்கதில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது." சத்தியத்திலிருந்து விலகிச் செல்லுதல் (விசுவாச துரோகம்) பெரிய அளவில் இருக்கும். நம்மைப்போல சந்தோஷத்துடன் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு கொஞ்ச காலம் நன்றாக ஓடியவர்கள், பிறகு விலகிச் செல்வார்கள். ஆனால் சபையானது, அவர்களது விசுவாசத்தினாலும், உண்மைத்தன்மையை விட்டுக் கொடுக்காததாலும், நீதி மற்றும் சத்தியத்தின் சர்வாயுதங்களினாலும் தோற்காமல் நிலைத்து நிற்பார்கள்.

யார் விழுந்து போவார்கள், யார் காயப்படுவார்கள் என்பது குறித்து நாம் நினைக்கக்கூடாது. ("உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும்") உலகத்தார், ஆனால் சபையின் நண்பர்கள், சபையோடு நெருங்கி ஐக்கியமாக இருந்தவர்கள் விழுவார்கள். உலகத்தார் தெய்வீக தயவிலிருந்து விழமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தெய்வீக தயவில் இருந்ததில்லை. முழு உலகமும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. ஆகையால் அது தூக்கியெறியப்பட முடியாது. இந்த வசனமானது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்கோ அல்லது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களின் நிலையை ஏற்றுக்கொண்டவர்களுக்கோ பொருந்துவதாக காணப்படுகிறது. உதாரணத்திற்கு களைகள் கோதுமை போல காட்டிக்கொள்ளுதல், அவைகள் கோதுமையாக இருந்ததில்லை. அவர்கள் இந்த வகுப்பை சேர்ந்தவர்கள் அல்ல என்பதை காலம் வெளிப்படுத்தும். ஆகையால் இந்த சித்தத்தில் பொதுவாக அர்ப்பணம் செய்தவர்கள் விழுவதையே நாம் குறிப்பாக பார்க்கிறோம். வலது புறத்தில் ஆயிரம் பேரும், இடது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுவதற்கு வித்தியாசம் இருக்கிறது. ஆயிரம் பேர் முழுமையான அவிசுவாசத்திலும் பதினாயிரம் பேர் "திரள் கூட்ட" வகுப்பார் தங்கள் வெண் வஸ்திரங்களை தோய்த்தும் வெளுப்பதற்கு மகா ஆபத்தின் நாளில் விழுவார்கள். அவர்கள் பாபிலோனின் பாவத்திலும் அவளது விழுகையிலும் பங்கு பெறுவார்கள் என்று நாம் யூகிக்கலாம். (வெளி. 14:18; 18:10)

"உன் பக்கத்தில் ஆயிரம் பேர் விழுவார்கள்" என்கிற தீர்க்கதரிசன அறிக்கை மிதமிஞ்சியதல்ல. கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்ட, தேவனுடைய குமாரனின் சாயலில் இருப்பவர்கள் மட்டுமே அவரில் முழுமையாக நிலைத்திருப்பார்கள். இவர்கள் முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள். அவர்களை வஞ்சிப்பதோ சிக்க வைப்பதோ கூடாத காரியம், ஏனெனில் தேவன் அவர்களுக்கு "தற்கால சத்தியத்தை" கொடுப்பார். இப்படியாக கிறிஸ்துவின் "பாத" வகுப்பினர் இடறாமல் நிலைநிறுத்தப்படுவார்கள்.

"உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கனுக்கு வரும் பலனைக் காண்பாய்." துன்மார்க்கர் என்பது சத்தியதை நிராகரித்தவர்கள் அல்லது அவிசுவாசத்தை நிரூபித்தவர்கள். நாம் முன்னரே இந்த ஆபத்துகளை கடந்து கொண்டிருக்கிறோம்; அநேகர் ஒவ்வொரு வகையிலும் தப்பறை மற்றும் துரோகத்தில் விழுந்து கொண்டிருக்கும் போது நாம் தப்பித்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். ஆபத்திலிருந்து நாம் எடுக்கப்பட்டதால் மாத்திரம் நாம் தப்பிக்காமல் பலப்படுத்தப்பட்டு ஆதரிக்கப்படுகிறோம். நமது கேடகமும் பரிசையுமாகிய கர்த்தருடைய வார்த்தையினால் அவைகளின் நடுவே பாதுகாக்கப்படுகிறோம்.

**"பொல்லாப்பு உனக்கு நேரிடாது"**

" எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்கு தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது." எந்தவிதமான தீங்கும் என்று குறிப்பிடப்படுகிறது. தீமைகளாக காணப்படுகிற எதுவும் தெய்வீக கிருபையின் கீழ் உங்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. (ரோமர் 8:28)

இந்த தீங்கு நாளில், உண்மையாக அர்ப்பணம் செய்தவர்கள் மட்டுமே இடறி தவறுக்குள் விழுவதிலிருந்து காக்கப்படும்படி தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் தெய்வீக அருளை அதிகமதிகமாக பாராட்டக் கற்றுக்கொள்ளுகிறோம். அது தெய்வீக வார்த்தை மற்றும் திட்டத்தின் உட்புறமான பலத்தையும் அழகையும் காண நமது அறிவின் கண்கள் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களது விசுவாசம் மற்றும் உறுதியான தன்மையிலிருந்து விழுந்து கொண்டிருக்கும் போது, தெய்வீக கிருபை நம்மை கர்த்தரில் பலப்படுத்துகிறதற்காக நாம் "நடுக்கத்துடனே (பயபக்தியுடனே) களிகூரக்கடவோம்." பலமும் நல்ல ஆதரவும் இருப்பதாக உணருகிறவன் "மேட்டிமைச் சிந்தையாய் இராமல்" "விழாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கக்கடவன்." கர்த்தருக்கு தாழ்மை மற்றும் வைராக்கியம் போன்ற விதிமுறைகள் மூலமே நாம் பெரிய ஆசீர்வாதத்தை பெற்றோம். அந்த விதிமுறைகள் மூலமே நாம் அதை முடிவு வரை தக்க வைத்துக் கொள்ளமுடியும். அதாவது நமக்கு மறுரூபமாகுதல் வந்து, நமது பலவீனத்தில் ஆரம்பித்த கிருபை மகிமையில் நிலைநிறுத்தப்படும் வரை.

"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி,

உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்.” அதாவது “உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிற” சில உண்மையுள்ள பாஸ்டர்களையும் போதகர்களையும் தேவன் எழும்பப் பண்ணுவார். உண்மை தான், கள்ள போதகர்கள் எழும்பி கர்த்தரின் வார்த்தையை மாற்றி, தந்திரமான வஞ்சகத்தினால் உங்கள் ஆத்துமாக்களை கவிழ்த்து போட நாடுவார்கள். இருதயத்தில் எளிமையுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர்களது விசுவாசத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் தேவைப்படுவது “கர்த்தர் சொல்லுகிறதாவது” என்பது தான். எல்லாவற்றையும் வசனத்தினால் ஜாக்கிரதையுடன் நிரூபிக்க வேண்டும். அவர்கள் சத்தியத்தையும், தப்பறையையும் உடனே வேறுபடுத்தி காண்பிக்க தயாராயிருப்பார்கள். இப்படி செய்து, தைரியத்தை விட்டு விடாதிருங்கள் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு யோசனை கூறுகிறார். (எபிரேயர் 10:35) நமது மேய்ப்பராகிய கர்த்தர் உண்மையான ஆட்டை கவனிப்பார்.

தேவனுடைய தூதர்கள், இந்த சுவிசேஷ யுகத்தில் இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு அவர்கள் எல்லாம் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாக இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு உறுதியளிக்கிறார். ஜெயங்கொண்டவர்களாகிய “சிறுமந்தைக்கு” மாத்திரமல்ல, ஜெயங்கொண்டவர்களாகிய “திரள் கூட்டத்தாருக்கும்” ஆகும். நமது கர்த்தராகிய இயேசுவும் தமது அறிவிப்பில் இதே கருத்தையே தெளிவாக எடுத்துரைக்கிறார். “அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமூகத்தை எப்பொழுது தரிசிக்கிறார்கள்.” (மத்தேயு 18:10) “தெரிந்துகொள்ளப்பட்ட” வகுப்பாராகிய அர்ப்பணம் செய்தவர்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தூதர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்று நமது ஆண்டவரின் வார்த்தைகளில் காணப்படுகிறது. பரலோக பிதாவானவர் புது சிருஷ்டியில் தனிப்பட்டவர்களுக்கு நன்மை பயக்கும் என்றால் உலக ரீதியான பாதிப்பு அல்லது சேதத்தை அனுமதிப்பார். இல்லையென்றால் யாரும் எந்த வகையிலும் அவர்களுக்கு கெடுதல் செய்ய முடியாது. தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்ற உறுதிமொழிக்கு இது மிகவும் இசைவாக இருக்கிறது. (ரோமர் 8:28)

கர்த்தரின் பூமிக்குரிய பிள்ளைகள் அடிக்கடி ஒருவருக்கொருவர் ஊழியர்களாக பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்ற கருத்தை அப்படிப்பட்ட பரலோக தூதர்களின் பயன்பாட்டை பயனற்றதாக ஆக்காது. உண்மையிலேயே அதரிசனமான ஊழியர்கள், எப்பொழுதும், இல்லாதிருந்தாலும், மனிதர்களைக் கொண்டு விசேஷமாக “தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களைக்” கொண்டு தேவையான சமயத்தில் ஊழியம் செய்கிறார்கள் என்று உறுதிப்படுத்தப்படுகிறோம். இந்த வகையான ஊழியங்களை சகோதரர்கள் ஒருவருக்கொருவர் செய்து வருகிறார்கள். பிரசன்னமாயிருக்கும் நமது கர்த்தரும் அவரது பரலோக சேனைகளும், மாம்சத்தில் இருக்கிற அவரது சரீர அங்கங்கள் செய்கிற ஊழியத்தை மேற்பார்வையிடுகிறார்கள்.

## தேவன் காத்துக்கொள்ளும் வல்லமை அறுவடைச் செய்தி

“உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்.” “உன்னை” என்பது கிறிஸ்துவின் சரீர அங்கங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் குறிக்கிறது. தப்பறையான போதனையாகிய இடறுதலின் கல்லுக்கு எதிரான பாதுகாப்பிற்கு அவர்கள் முழு பலத்தையும் பயன்படுத்துகிறார்கள். விசேஷமாக கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் இரட்சிப்பு என்கிற மகா அடிப்படையான போதனையை பாதுகாக்கிறார்கள். “தடுக்கலின் கல்லும் இடறுதலின் கன்மலையும்” என்பது பெயரளவான இஸ்ரயேலின் இரண்டு கோத்திரத்தைக் குறிக்கிறது. (ஏசாயா 8:14) சரீரத்தின் “பாதம்” அதன் கடைசியான அங்கங்களைக் குறிக்கிறது, இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் பாத அங்கங்கள். யூத கோத்திர பாத ஊழியர்கள் யூத யுக முடிவில் அறுவடையில் ஆபத்தில் இருந்தது போல, இப்போது இருப்பவர்கள் இடறி விழும் ஆபத்தில் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட தூதுவர்கள் எப்படி கிறிஸ்துவின் பாதத்தை தாங்குகிறார்கள்? சத்தியத்தை சரியாக புரிந்து கொள்ளுவதற்கு உதவுவதின் மூலம், சத்தியத்துக்கு எப்படி உண்மையுள்ளவர்களாயிருப்பது நமது பரம அழைப்பின் பந்தயப் பொருளை அடையும்படியாக எப்படி ஓடுவது என்பது குறித்து வசனம் மற்றும் உதாரணம் மூலம் அவர்களுக்கு போதித்து உற்சாகப்படுத்துவதின் மூலம் உதவுகிறார்கள்.

இந்த வேலையில் பரலோக தூதர்களும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் முன்னரே சொன்னது போல மாம்சத்தில் இருக்கும் சபை மூலமாக இது நிச்சயமாக செய்யப்படுகிறது. கர்த்தர் இந்த அறுவடை காலத்தில் அவருடைய தூதர்களுக்கு, அர்ப்பணம் செய்த ஜனங்களின் தலைவர்களுக்கு ஒரு “பொறுப்பை” ஒரு செய்தியை, எச்சரிக்கையின் வார்த்தையை, ஆலோசனையை, புத்திமதியை கொடுத்திருக்கிறார்.அதாவது சத்திய வார்த்தையை திறத்தல், அவர்களது அறிவின் கண்களை பிரகாசிக்க செய்தல், அதன் மூலம் பாத வகுப்பின் அங்கங்களை தாங்க வேண்டும். பரீட்சையும் இடறுதலும் உள்ள இந்த தீவிரமான சோதனை காலத்தில், தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரும் தற்கால வினோதமான சோதனைகளில் எந்த வகையிலும் இடறக்கூடாது. எப்படி இது தெளிவாக நிறைவேற்றப்படுகிறது! தற்காலத்தில் வெளிப்பட வேண்டிய சத்தியங்கள் மற்றும் தற்போது கொண்டு வரப்படுகிற தப்பறைகள் அடங்கிய அறுவடை செய்தி தேவனுடைய பாதுகாக்கும் வல்லமையாக இருக்கிறது. அது அவரது உத்திரவாதத்தின்படி கிறிஸ்துவின் சரீரத்தின் “பாத” அங்கங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று நாம் அறிகிறோம்.

கர்த்தருடைய இந்த ஆசீர்வாதங்கள் மற்றும் கிருபைகளில் நாம் களிகூர்ந்து, நமது விசுவாசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். "புத்திரரின் வீட்டை" ஏற்பாடு செய்வதற்கு முன்னரே கர்த்தரின் வல்லமையை பெற்றிருந்த அதை "ஊழியக்காரன் வீட்டில்" அந்த வல்லமையின் அபரிமிதத்தை நமக்கு விளக்கும் வகையில் அப்பியாசப்படுத்தினதை நாம் நினைவுகூருகிறோம்.

நாம் விசுவாசித்து நடவாமல் தரிசித்து நடப்பதையே சாத்தான் விரும்புவான். நாம் தேவனுடைய வார்த்தையின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் எளிமையை சார்ந்திருப்பதற்கு பதிலாக அவரது கிருபை மற்றும் பாதுகாப்பை நேரடியான செயல் விளக்கத்தின் மூலம் நிரூபிக்கும்படி அவரை நாம் தொடர்ந்து சோதிப்பதையே அவன் விரும்புகிறான். வெளிப்பட்டு வரும் சத்திய வெளிச்சத்தில் சாத்தான் தெரியாமல் வேத வசனங்களை தவறான பொருளிலும் விளக்கத்திலும் மேற்கோள் காட்டியதை நாம் பார்க்கிறோம். இயேசுவின் சொல்லர்த்தமான பாதங்களை, சொல்லர்த்தமான கல்லை, சொல்லர்த்தமான தூதனை குறிப்பிடாமல், கிறிஸ்துவின சரீரத்தின் பாத அங்கங்கள், இடறுதலின் கல்லை அடையாளமாக அவர் குறிப்பதை அவன் தவறாக விளக்குகிறான். இவைகள் விசுவாசிகளின் பாதையில் தூதர்களுக்கு அல்லது தெய்வீக சத்தியத்தின் ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இன்றைய அறுவடை காலத்தில் "பாத" அங்கங்களை தாங்குவதற்கு நியமிக்கப்படுகிறவர்கள். வேத வாக்கியங்களின் இப்படிப்பட்ட ஆலோசனைகள், எச்சரிக்கைகள் மற்றும் விளக்கங்கள் அவர்களுக்கு தேவைப்படும்.

"சிங்கத்தின் மேலும் விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து பால சிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்." இப்படியாக இவர்கள் கர்த்தரின் உண்மையுள்ள தூதர்களின் கைகளால் தாங்கப்பட்டு, அவர்களது விழிப்புடன் கூடிய கண்காணிப்பினால் பாதுகாக்கப்பட்டு, உன்னதமானவரின் நிலையான பாதுகாப்பின்கீழ் இருக்கிறார்கள். நம்பிக்கையும் விசுவாசமுள்ள தேவனுடைய பிள்ளைகள் சாத்தானின் சாதனங்கள் மேல் வெற்றி கொள்வார்கள் அல்லது ஏமாற்றுவார்கள். அவன் கர்ஜிக்கிற சிங்கம் போல் போனாலும் அல்லது பாம்பைப் போல போனாலும், அவன் இரகசியமாக மறைந்திருந்து அவனது நஞ்சு நிறைந்த விஷத்தை கக்கினாலும் அவர்கள் ஜெயங்கொள்ளுவார்கள்.

"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன்." "பாத" வகுப்பாரை அமைக்கிற தனிப்பட்ட அங்கங்களின் அன்பு மற்றும் விசுவாசத்தினிமித்தம் பரம பிதா கொள்ளை நோய் முதலானவைகளிலிருந்து அவனை விடுவிப்பார். அவனை "ராஜரீக ஆசாரிய" கூட்டத்தின் அங்கமாகவும் தெய்வீக சுபாவத்தின் ஒரு பங்குதாரராகவும் ஆக்கி கிறிஸ்துவின் உடன் சுதந்தராக உயர்த்துவார்.

"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்திலே நானே அவனோடிருந்து அவனை தப்புவித்து, அவனை கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனை திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்கு காண்பிப்பேன்." அவர் தம்முடைய திட்டத்தை அவன் அறியும்படி செய்வார். கர்த்தரால் தனிப்பட்டவர்களாக அறியப்பட்டவர்கள், கண் கண்டபடி நியாயம் தீர்க்கமாலும், தன் காது கேட்டபடி தீர்ப்பு செய்யாமலும், இருதயத்தின் நோக்கங்களையும் எண்ணங்களையும் பகுத்தறிந்து நியாயந்தீர்ப்பார்கள். எனினும் அவர்கள் பரவலாக சிதறி இருந்தாலும், களைகளின் நடுவே "கோதுமையாக" தனித்து நின்றாலும் அல்லது மற்றவர்களோடு கூட்டமாக இருந்தாலும் தேவனுடைய கண்கள் அவர்கள் மேலேயே எப்பொழுதும் இருக்கிறது. உன்னதமானவரின் மறைவில் தங்கியிருந்து, அவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான். அவிசுவாசத்துடன் கர்த்தரின் நாமத்தை தரித்திருக்கிற மாபெரும் மத ஸ்தாபனங்கள் மேல் அவரது நியாயத்தீர்ப்பு இருக்கும். மகா பாபிலோனின் நியாயத்தீர்ப்பின் மீது அவர்களது பங்கு இருக்காது. ஆனால் அவர்கள் முன்னரே அறிவு தெளிவு பெற்று அவளை விட்டு வெளியே வர அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவரது அன்பான இப்படிப்பட்ட உறுதிமொழிக்கு கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே அவரது பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி!" ஆமென்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**